PUBLIC LIBRARY
JAFFNA

★ விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 பங்குனி 2 ஜு. ஆவ. 30 இதழ் 34

யாழ்ப்பாணம் புதன்கிழமை 16—3—83

## போலி ரூபா நோட்டுகள்: நிதி அமைச்சர் திடுக்கிடும் தகவல்கள்!

(இ. சுந்தரசாமி)

''நாட்டில் முப்பது லட்சம் முதல் எண்பது லட்சம் வரையான கள்ளநோட்டுகள் புழக்கத்தில் இருந்தன. இவற்றில் பதினெட்டுலட்சம் ரூபா கள்ள நோட்டுகளைப் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்'' என்பது போன்ற பரபரப்பான தகவல்களை நிதி திட்டமிடல் அமைச்சர் திரு. ரொனி டி மெல் பாராளுமன்றத்தில் வெளியிட்டார்.

நூறு ரூபா நோட்டுகள் இவ்விதமாகக் கள்ளத்தனமாக அச்சிடப்பட்டு, புழக்கத்தில் உள்ளதென்றும், இவற்றில் 'நீர் அடையாளங்கள்' இல்லையாதென்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

சமீபத்தில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்குக் கடத்தப்படவிருந்த பெருவாரியான கள்ள ரூபா நோட்டுகள் பொலிசாரிடம் சிக்கியதாகவும் நிதியமைச்சர் தெரிவித்தார்.

ஒத்திவைப்புப் பிரேரணையின்போது அட்டுத்தனை எம். பி. திரு. டபிள்யூ. ஜே. எம். லொக்குபண்டார நிதியமைச்சரிடம் கேள்வியொன்றை எழுப்பினார்.

நாட்டில் இப்போது நடமாடும் கள்ள நோட்டுகள் குறித்து அரசு எவ்விதமான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்று நிதியமைச்சரிடம் அவர்

(8ம் பக்கம் பார்க்க)

## ★ இ. போ. ச. வாகனங்களில் அனுப்பப்பட்டு

# பல்கலைக்கழக மாணவர்களை 300 குண்டர்கள் பயமுறுத்தினராம்

## மாணவரைப்பாதுகாக்குமாறு 'அமிரு'க்கு மாணவர் தலைவர் தந்தி

(கொழும்பு)

''கோட்டே ஸ்ரீ ஜெயவர்த்தனபுரம் பல்கலைக்கழக மாணவர்கள் பொலிசார் முன்னிலையில் பயமுறுத்தப்பட்டுள்ளனர். மாணவர்களைப் பாதுகாக்க உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுங்கள்!'' என்று அனைத்து இலங்கைப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் திரு. எச். எம். புஷ்பகுமார எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தை அவசரத் தந்திமூலம் கேட்டுள்ளார்.

எதிர்க் கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்துக்கு திரு. எச். எம். புஷ்பகுமார நேற்றுப் பகல் அனுப்பிவைத்த அவசரத் தந்தியில் தெரிவித்துள்ளதாவது:-

''இன்று காலை இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான வாகனங்களில் அனுப்பப்பட்ட முந்நூறுக்கும் அதிகமான குண்டர்கள் விஜேராம சந்தியிலிருந்து ஸ்ரீ ஜெயவர்த்தனபுரம் பல்கலைக்கழகத்துக்கு வந்து பொலிஸ் அதிகாரிகள் முன்னிலையில் மாணவர்களைப் பயமுறுத்தியுள்ளனர். இந்தப் பயமுறுத்தலுக்கு எதிராகவும், மாணவர்களைப் பாதுகாக்கவும் தயவுசெய்து உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுங்கள்''.

### 'அமிர்' நடவடிக்கை

மேற்படி அவசரத் தந்தியைத் தொடர்ந்து எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் இன்று பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பவிருக்கிறார்.

''இச்சம்பவம் தொடர்பாக அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?'' என்று பிரதி உயர் கல்வி அமைச்சரை எதிர்க்கட்சி முதல்வர் இன்று ஒத்திவைப்பு நேரத்தில் கேள்வி எழுப்ப முன்னறிவித்தலும் கொடுத்துள்ளார்.

## அசாமில் 10,000 பேர் படு கொலை?

### இந்திராகாங்கிரஸ் உறுப்பினர் தகவல்

புதுடில்லி மார்ச். 15

அசாம் மாநிலத்தில் கடந்த மாதம் 10,000க்கும் அதிகமானோர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்களென்று இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் சைனூர் பஷிர் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இந்திய மத்திய உள்துறை அமைச்சர் திரு. பி. வி. சேத்தி அசாமில் 1500 பேரே படுகொலை செய்யப்பட்டதாகவும், 2,000 பேரைக் காணவில்லையென்றும் பாராளுமன்றத்தில் கூறினார். (வெ)

## தனியார்துறையினருக்கும் ரூ. 100 சம்பள உயர்வு

[கொழும்பு]

''தனியார் துறையினருக்கும் உடனடியாக 100 ரூபா சம்பள உயர்வு வழங்குவதற்கான ஏற்பாட்டை தொழில் அமைச்சர் மேற்கொண்டுள்ளார்''.

[8-ம் பக்கம் பார்க்க]

## மாணவர்கள்மீது இராணுவத்தாக்குதல்?

### ஆட்சேபம் தெரிவித்து இன்று பாடசாலை பகிஷ்கரிப்பு!

(புலோலி)

கல்லூரி தொடர்பான நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டு விட்டு வீடு திரும்பிக்கொண்டு இருந்த மாணவர்களை வீதியில் வைத்து இராணுவத்தினர் சைக்கிள் செயின்களாலும், சப்பாத்துக் கால்களினாலும் தாக்கிக் காயப்படுத்தியதுடன் அவர்களின் சைக்கிள்களையும் தூக்கிக் கடலில் வீசினார்களாம்.

இச்சம்பவத்துக்குக் கடும் ஆட்சேபம் தெரிவிக்கவும், இப்மாதிரி சம்பவங்கள் மீண்டும் நடைபெறுமல் தடுக்கவும் கோரி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள் இன்று ஒருநாள் பாடசாலைப் பகிஷ்கரிப்பில் ஈடுபடுகின்றனர்.

கடந்த சனிக்கிழமையன்று (12-ம் திகதி) ஹாட்லிக் கல்லூரி வீரர்கள் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி வீரர்களுடன் கிரிக்கெட் போட்டி ஒன்றில் கலந்து கொண்டு விட்டுப் பாடசாலைக்குத் திரும்பி மாலை 6 மணியளவில் வீடுகளுக்குப்

(8-ம் பக்கம் பார்க்க)

Diploma in Computer Programming

புதிய வகுப்பு 19-03-83 இல் ஆரம்பமாகிறது

செய்முறை: Miaro கொம்பியூட்டர்களில் முழுமையான பயிற்சியளிக்கப்படும்.

கட்டணம்: Level I, II & III – 1050 ரூபா
Computer Application – 750 ரூபா
(குறிப்பு: மாணவர்கள் தவணை அடிப்படையில் பணம் செலுத்தலாம்.)

விரிவுரையாளர்: N S ராஜா B.sc (Hons) U. K,
(Former Computer Conseltant, B. E. Ltd., U.K.)

மேலும் விபரங்களுக்கு:

DIGITAL COMPUTER CONSULTANTS

(Insurance Corporation ற்கு முன்னால்)

615, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

6-47

## ''இளைஞர்களின் உண்மை நோக்கம் அறிய வன்செயலில் ஈடுபடும் இளைஞர்களை ஜனாதிபதி சந்திக்கவேண்டும்'

### பாராளுமன்றத்தில் 'நவம்'

[கொழும்பு]

''வடக்கில் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு ஜனாதிபதி விருப்பம் கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. விருப்பம் கொண்டால் மட்டும் போதாது, அதற்கான வழிமுறைகளையும் மேற்கொள்ள வேண்டும். வடபகுதியில் வன்செயல்களில் ஈடுபட்டுவரும் இளைஞர்களை ஜனாதிபதி சந்திக்கவேண்டும். அவர்களுடன் பேச்சு நடத்தவேண்டும். அவர்கள் ஏன் இப்படி நடக்கிறார்கள் என்பதை அறியவேண்டும்.''

நேற்று வரவு செலவுத்திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் சாவகச்சேரிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினம் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

''அரசியல் அமைப்புச் சட்டம் அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கின்றது. ஆனால் எமது இளைஞர்கள் பலர் காரணமின்றிக் கைது செய்யப்படுகிறார்கள். காவலில் வைக்கப்படுகிறார்கள். இலக்கியத் தொகுப்பொன்றை இந்தியாவிலிருந்து கொண்டுவந்த பல்கலைக்கழக மாணவர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு இன்னமும் காவலில் வைக்கப்பட்டுள்ளார். அது என்ன நூல் என்றுகூட அவரது சட்டத்தரணிகளுக்கு அறிவிக்கப்படவில்லை'' என்று தெரிவித்த திரு. நவரத்தினம் மேலும் கூறியதாவது:

(8ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கோப்பாய் நாவலர் பாடசாலைக்கும் கிறிஸ்தவக் கல்லூரிக்கும் மத்தியில் பிரதான வீதிக்கு மிக அண்மையில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. கடித மூலம் தொடர்பு கொள்ளவும். M. S. மயில்வாகனம், கிழவாலை வீதி, கோப்பாய். (6533)

80 சிறி 3282 தொடர்பிலக்க முடைய நீல முகப்புக்கொண்ட HONDA மோட்டார் சைக்கிள் ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சி. ஞா. இரகுநாத சர்மா, சிவகாமி அம்மன் கோவில். ஆலடி, காரைநகர். (6541)

இத்தாலியில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வீட்டுப் பாவனைக்கு உகந்த "COMEX" ½ H.P. மின்சாரத் தண்ணீர் பம்புகள் மலிவான விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம். நூர்வி என்ரபிறைஸஸ், கந்தப்பாசெட்டியார் லேன், யாழ்ப்பாணம். (சாந்தி சினிமா முன்பு) (6534)

ஜோதிட உலகில் புகழ் பெற்ற முன்னோடிகளான, தெல்லிப்பளை ஆயர்பாடி ஜோதிட நிலயத்தாரின் (1983-84 ருதிரோத்காரி) ஆயர்பாடி வருஷ ராசிபலன்கள் வெளிவந்து விட்டன. தமிழ் சித்திரை முதல் ஒரு வருஷ பலன்கள் ஒவ்வொரு ராசிக்கும் தனித்தனிப் பிரதிகள் எங்கும் எல்லாப் புத்தக வியாபாரிகளிடமும் கிடைக்கும். தபாலில் பெற ராசியையும் குறிப்பிட்டு 10×50 சத முத்திரை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி: நிர்வாகி ஆயர்பாடி ஜோதிட நிலயம் தெல்லிப்பளை. 6485

## விற்பனைக்கு

கந்தர்மடம் பழம் ரோட்டில் 1 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு 71, பழம் ரோட் கந்தர்மடம். 6527

2 சிலிண்டர் டீசல் பெற்றர் இயந்திரமும் 5 K. V. A. டைனமோவும் உடன் விற்பனைக்குண்டு. சிவபாலமூர்த்தி 6/2, அத்தியடி புது வீதி, யாழ்ப்பாணம். 6492

## பயிற்சி

கொம்பியூட்டர் புறோகிறாமிங், றேடியோ - டெலிவிசன், எலக்றிக்கல் வயறிங் மோட்டர் மெக்கானிசம் வெல்டிங் சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன் வகுப்புக்கள் ஆரம்பம் 21-03-83 விபரம் நேரில் The School of Computer Studies 52/1, கனகரத்தினம் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 6524

## வகுப்புகள்

Scientific Cutting, Hair Styles, Cake Making & Icing, Short Eats, Flower Making ஆகியவற்றிற்கு வகுப்புக்கள் நடைபெறுகின்றன. சேர விரும்புவோர் சனி, ஞாயிறுகளில் தொடர்புகொள்ளவும். இல. 27, மின்சார நிலைய வீதி சாமி அன் கோ அருகில் உள்ள 3-வது ஒழுங்கை முடிவில் உள்ளது. நிர்வாகி, The Ladies' Academy. 6410

விளம்பரம் செய்க

வியாபாரம் பெருக

## தேவை

காசிளர் தேவை A/L படித்த 24 வயதுக்குட்பட்ட யாழ். மாநாகர எல்லைக்குள் வசிப்பவர் மட்டும் 22-3-83 முன் விண்ணப்பிக்கவும், கொழும்பு ஸ்ருடியோ, 164, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (6543)

## சேவை

டைப் ரைட்டிங் சர்வீஸ் ஆங்கிலத்தில் கடிதங்கள் டைப் செய்து கொடுக்கப்படும். K. L. M. Krishna pillaiy, ஸ்ரீ பராசக்தி சோதிட நிலையம், 151, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம், (6548)

## வருடாந்தக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆசிரியர்சகாய நிதிச் சங்கத்தின் 49வது வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை திரு. அ. விசுவநாதன் தலைமையில் யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## நெடுந்தீவில் குடிநீர்க்கஷ்டம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மத்தி கிழக்குப் பகுதி மக்கள் தற்போதைய கடும்வரட்சி காரணமாகத் தமக்குத் தேவையான குடி நீரைப்பெறமுடியாதிருக்கின்றனர். இப்பகுதி மக்களுக்கு குடி நீர் விநியோகம்செய்ய நடவடிக்கை எடுக்குமாறு தீவுப் பகுதிப் பிரதிநிதி யாழ் அரசாங்க அதிபர் அகியோரை நெடுந்தீவு முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. என். இலட்சுமணராசா கேட்டுள்ளார்.

## மானிப்பாய் இந்து அதிபர் ஓய்வு பெற்றார்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் எஸ். ரி. சாரி கல்விச் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

இக்கல்லூரியில் 1946ம் ஆண்டு ஆசிரியராக நியமனம் பெற்ற இவர் படிப்படியாக பதவி உயர்வு பெற்று 7 ஆண்டுகள் உபஅதிபராகவும் 4 ஆண்டுகள் அதிபராகவும் கடமையாற்றினார்.

இவர் யாழ். விளையாட்டுச் சங்கத்தின் தலைவராகவும், இந்து சமய விருத்திச்சங்கம் உட்பட மற்றும் முக்கிய சங்கங்களின் நிர்வாக உறுப்பினராகவும் கடமையாற்றினார்.

மானிப்பாய் இந்துக்கல்லூரியின் இன்றைய வளர்ச்சிக்குத் தமது சேவை காலத்தின் பெரும்பகுதியை திரு. சாரி அர்ப்பணித்திருக்கின்றார்.

## "தலைமைக்குக் கட்டுப்பட்டு நடப்பதே சிறந்தபண்பு" - அமிர்

[மானிப்பாய்]

"தலைமைப்பீடத்துக்குக் கட்டுப்பட்டுச் செயற்படுவதே மிகச்சிறந்தபண்பாகும். வட்டு புதிய எம். பி. யாக டாக்டர் நீலன் நியமிக்கப்பட்டதை ஏற்றுக்கொண்டு, அவரை இங்கு கௌரவிப்பதைப்பார்க்கும்போது மிகவும் மகிழ்ச்சியாகிறது"

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணிச்செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம், புதிய வட்டு. எம். பி. யாக டாக்டர் நீலன்திருச்செல்வம் நியமிக்கப்பட்டதைப் பாராட்டுமுகமாக சட்டத்தரணி இ. த. விக்னராஜா இல்லத்தில் நடந்த தேநீர்விருந்துபசாரத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

டாக்டர் நீலன் திருச்செல்வம் பேசுகையில் தமக்கு அளிக்கப்படும் ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவித்தார். தொகுதிமக்களுக்கு தம்மாலான சேவைகளை வழங்குவதாகக் குறிப்பிட்டார்.

சட்டத்தரணி இ. த. விக்னராஜா பேசுகையில், "சிறு வயதிலிருந்தே இயக்கத்தின் வளர்ச்சிக்காக உழைத்து வருகிறேன். அண்ணன் அமிருக்கு பக்கபலமாக என்றும் இருந்து செயலாற்றுவேன்" என்றார்

வட்டு. தொகுதி கூட்டணி கிளைகளைச்சேர்ந்த உறுப்பினர் பலரும் கலந்து கொண்டனர்.

## பருத்தித்துறையில் 5 பாடசாலைகளின் தரம் குறைக்கப்படமாட்டது! கல்வி அமைச்சு அறிவிப்பு

(கரவெட்டி)

பருத்தித்துறை கிழக்குப் பகுதியில் இவ்வாண்டு முதல் தரம் குறைக்கப்பட்ட ஐந்து கத்தோலிக்க பாடசாலைகளும் கடந்த வருடம் இயங்கியது போலவே மீண்டும் இயங்கும் என்று கல்விஅமைச்சு அறிவித்துள்ளது.

இப்பகுதியிலுள்ள கட்டைக்காடு றோ. க. பாடசாலை, தாளையடி றோ. க. பாடசாலை, வெற்றிலைக்கேணி றோ. க. பாடசாலை, செம்பியன்பற்று றோ. க. பாடசாலை, குடத்தனை கரையூர் றோ. க. பாடசாலை ஆகிய ஐந்து பாடசாலைகளும் இவ்வாண்டில் இருந்து தரம்குறைக்கப்பட்டதற்கு யாழ். ஆயர் கலாநிதி அதி. வந் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை, யாழ். மறைமாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கப்பொதுச்செயலாளர் திரு. சி. வின்சென்ற் ஆகியோர் கல்வி அமைச்சிடம் ஆட்சேபம் தெரிவித்திருந்தனர்.

இதனைத்தொடர்ந்தே பிரஸ்தாப பாடசாலைகள். தரம் குறைக்கப்படாது பழையநிலையிலேயே தொடர்ந்தும் இயங்கும் என்று கல்விஅமைச்சு அறிவித்திருக்கிறது.

இதுசம்பந்தமாக கல்வி அமைச்சு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் இப்பகுதிக் கத்தோலிக்க பாடசாலைகளில் மறைக்கல்வி போதிப்பதற்கென மறை ஆசிரியர் ஒருவரைத் தந்துதவுமாறும் யாழ் மேற்றிராசனத்திடம் கோரப்பட்டுள்ளது. [க]

## வருடாந்த மகோற்சவம்

[யாழ்ப்பாணம்]

சுதுமலை சிவன்கோவில் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் வெள்ளிக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இம்மாதம் 25ம் திகதி வேட்டைத்திருவிழாவும் 26ம் திகதி சப்பறத்திருவிழாவும், 27ம் திகதி தேர்த்திருவிழாவும், 28ம் திகதி தீர்த்தோற்சவமும், கொடியிறக்கும் வைபவமும் நடைபெறவுள்ளது.

## சைக்கிள்கள் திருட்டு

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்புச் சந்தைப் பகுதியில் கடந்த ஒருவாரத்திற்கிடையில் அடுத்தடுத்து மூன்று சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட கோஷ்டியொன்றே திட்டமிட்டு இத் திருட்டை நடாத்திவருவதாக சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது. காங்கேசன் துறை பொலிஸ்நிலயத்திலும் இது பற்றி சைக்கிளை பறிகொடுத்தவர்கள் முறைப்பாடுசெய்துள்ளனர்,

## சங்க ஊழியர் கட்டாயலீவில்

[பண்டத்தரிப்பு]

வட்டுக்கோட்டை தொகுதியைச் சேர்ந்த பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் ஒன்றின் பொது முகாமையாளரை கடமை நேரத்தில் தாக்கிய குற்றச் சாட்டின் பேரில் சங்க ஊழியர் ஒருவர் சங்க நிர்வாகத்தினால் கட்டாயலீவில் அனுப்பப்பட்டார்,

## நன்றி

(மானிப்பாய்)

அராலி வடக்கு தண்ணீர் விநியோகம் சீராக நடைபெற உதவிய யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரனுக்கு வட்டுக்கோட்டை நாகேந்திரமடம் கிராம அபிவிருத்திச் சங்கம் நன்றி தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் நன்றிதெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம்பகுதி தண்ணீர்த் திட்ட வேலைகள் பூர்த்தியாவதற்கு ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறும் சங்கம் கேட்டுள்ளது.

"யாழ் மக்களுக்கு அரியதோர் சேவையை "குறேஸ் ட்ரவல்" ஸ்தாபனத்தார் அளிக்கின்றார்கள்"

பெல்ஜியம் விசாவுடன் பிரான்ஸ், இத்தாலி சுவிற்சலாந்து ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளுடன், உலகின் சகல நாடுகளுக்கும்

விமான, கப்பல் போக்குவரத்து ஒழுங்குகள் பிரயாணிகள் காசோலை, விசா போன்ற வசதிகள் செய்துகொடுக்கப்படும்.

தொடர்பு கொள்க!

"CROSS TRAVEL SERVICE"

"குறேஸ் ட்ரவல் சேவிஸ்"

இல. 5, 2-வது தொடர் மாடி,

நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல: 22040, 22065 [6480]

புதிய

"லக்ஸ்பிறே"

இந்நாட்டில் எல்லோரும் விரும்பி சுவைக்கும் பால் உணவு இப்பொழுது புதிய அழகான 500 கிறம் பக்கற்றுகளில் அடைக்கப்படுகிறது.

வியாபாரிகளே!

உங்கள் தேவையை நாம் உடனே பூர்த்தி செய்யத் தயாராக இருக்கிறோம்.

யாழ், வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு உத்தரவு பெற்ற விநியோகத்தர்கள்:

சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிட்டெட்,

484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 22134, 23819

அச்சுக்கோப்பாளர்கள்

மெஷின் மைன்டர்கள்

தேவை

ஐந்து வருடத்துக்கு குறையாத அனுபவம் உள்ள தமிழ் ஆங்கில அச்சுக்கோப்பாளர்கள் (கம்பஷிட்டர்கள்)

மெஷின் மைன்டர்கள் (பிளேட்டின்சிலின்டர்)

தேவை

அனுபவம் நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும்.

சி. சிவகுருநாதன்,

411/1, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(6549)

லெபனான் பிரச்னை:

# அமெ.ஜனாதிபதி இஸ்ரேலிய அமைச்சர் பேச்சு வார்த்தை

வாஷிங்டன், மார்ச். 15

லெபனானிலிருந்து வெளி நாட்டுத் துருப்புக்களை வெளி யேற்றுவது தொடர்பாக அமெரிக்கா சென்றுள்ள இஸ் ரேலிய வெளிநாட்டமைச்சர் திரு. ஷமீர் ஜனாதிபதி திரு. ரொனால்ட் றீகனுடன் பேச்சு வார்த்தை நடத்தினார்.

அதேவேளை ஐ. நா. விற் கான அமெரிக்கத் தூதுவர் திரு. பற்றிக் இஸ்ரேலியப் பிர தமர் திரு. மெனுச்சம் பெகி னைச் சந்தித்து சர்வதேச விவ காரங்கள் குறித்து கலந்துரை யாடியதுடன், லெபனான் பிரச்னை தொடர்பாக இஸ்ரேல் கடைப்பிடித்து வரும் கொள்கை பற்றியும் விளக்க மாகக் கேட்டறிந்து கொண் டார்.

லெபனானில் இஸ்ரேல் கடைப் பிடித்துவரும் போக்கினைக் கண் டித்து பெருந்தொகையானோர் நேற்று ஜெரூசலத்தில் ஆர்ப் பாட்டம் நடத்தினர்.

இது தொடர்பாக பொலி சார் பலரைக் கைதுசெய்துள் ளனர். (வெ)

## "வடபகுதி விவசாயிகள் கோதுமை பயிரிட வேண்டும்"

(மாவிட்டபுரம்)

"தரிசாகக் கிடக்கும் காணி களை பயனுள்ளவையாக மாற் றுவதற்கு வடபகுதி விவசாயி கள் கோதுமை உற்பத்தியில் நாட்டம் கொள்ளவேண்டும். கோதுமை உற்பத்தி மூலம் அதிக செலவு செய்யாமல் நல்ல பலனைப்பெற வழி உண்டு."

இவ்வாறு அளவெட்டி தெற்கு திரு. அ. சந்தையா என்பவரது தோட்டத்தில் இடம்பெற்ற கோதுமை அறு வடை விழாவில் கலந்துரை யாற்றிய யாழ். மாவட்ட விவ சாய உத்தியோகத்தர் திரு. பரமானந்தம் கூறினார்.

பரீட்சார்த்தமாக 200 சதுர அடியில் மேற்கொள்ளப்பட்ட கோதுமை உற்பத்தி மேற்படி தோட்டத்தில் வெற்றிகரமாக அமைந்ததையடுத்து இந்த அறுவடை விழா நடத்தப் பட்டது.

விவசாய விசாலிப்பு உதவி யோகத்தர் திரு. கே. சிவக லிங்கத்தால் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த இவ்விழாவில் முன் னாள் உதவி அரசாங்க அதிபர் திரு. சோ. அருணாசலம், கிரா மிய கைத்தொழில் சேவை நிலைய போதனாசிரியர் திரு. கருணாகரன், அளவெட்டி அரு ணோதயக்கல்லூரி விவசாயத் துறை ஆசிரியை திருமதி சத் தியமூர்த்தி, பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு. தவ ராஜா ஆகியோரும் கலந்து பேசினர்.

கோதுமை உற்பத்தி பற்றி இவ்விழாவில் கலந்துகொண்ட தொடர்பு சமிக்ஞாளர்களுக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் பயிர் பாதுகாப்பு உத்தியோ கத்தர் திரு. கே. எஸ். நட ராசா விளக்கம் அளித்தார். (க)

## விமான விபத்து: 19 பேர் பலி!

காபூல், மார்ச். 15

காபூலில் உள்ளூர் விமானசேவையில் ஈடு பட்டிருந்த விமானம் ஒன்று விழுந்துநொருங் கியதால் 19 பேர் பலி யானதாக அறிவிக்கப் பட்டது.

மோசமான வானிலையே இவ்விமானவிபத் திற்கு காரணமென்று தெரிவிக்கப்பட்டது. (வெ)

## புதிய நூறு ரூபா புழக்கத்திற்குவரும்

(கொழும்பு)

அடுத்த மாதம் முதல் புதிய நூறுரூபா நோட் டுக்கள் புழக்கத்திற்கு விடப்படுமென நிதி, திட்டமிடல் அமைச்சர் திரு. ரொனி டி மெல் பாராளுமன்றத்தில் தெரிவித்தார். (வெ)

## பங்களாதேஷில் பொதுத்தேர்தல்

டாக்கா, மார்ச். 15

பங்களாதேஷில் அடுத் தாண்டுபொதுத்தேர்தல் நடத் தப்படுமென்றும், இதற்கு அர சியல்கட்சிகளைத் தயாராகுமா றும் அந்நாட்டின் ஜனாதிபதி லெப்டினன்ட் ஜெனரல் எர் ஷாத் அறிவித்துள்ளார். (வெ)

## "அசாம் சட்டப்பேரவை கலைக்கப்படமாட்டாது"

### மத்தியஉள்துறை அமைச்சர் கூறுகிறார்

புதுடில்லி, மார்ச். 15

"அசாம்சட்டப்பேரவையோ அமைச்சரவையோ கலைக்கப் படமாட்டாது. அசாமில் வன் முறை ஆதிக்கம் செயல்பட்டு வருகிறது. அனைத்து அசாம் மாணவர்களின் கிளர்ச்சி இந் தியர்களுக்கு, வெளிநாட்டவர் களுக்கும் எதிராக நடத்தப்படு கிறது".

இவ்வாறு அசாம் மாநிலத் தில் விஜயத்தை மேற்கொண் டுள்ள இந்திய மத்திய உள் துறை அமைச்சர் திரு.பி.வி. சேத்தி நிருபர்களிடம் தெரி வித்தார்.

அசாமில் இடம்பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்களினால் பலர் பலியாகியுள்ளதும், 3லட் சம் பேர் அகதிகள் முகாமிலி ருந்து வருவதும்தெரிந்ததே. (வெ)

## சத்துணவு திட்டம்: எதிர்க்கவில்லை

சென்னை, மார்ச். 15

தமிழ்நாடு அரசின் சத்துண வுத் திட்டத்தை எதிர்க்க வில்லையென்றும், அதன் நடை முறையில்தான் குறைபாடுகள் காணப்படுவதாக தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி சட்டப்பேரவையில் தெரிவித் துள்ளார். [வெ]

கராச்சியில்

## இரு பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டன!

### மாணவர் — பொலிசார் மோதல் எதிரொலி

டாக்கா, மார்ச். 15

கராச்சியிலுள்ள இரண்டு பல்கலைக்கழகங்கள் நேற்று மூடப்பட்டன. மாணவர்களுக் கும் பொலிசாருக்குமிடையே இடம்பெற்றமோதலையடுத்தே பல்கலைக்கழகங்கள் மூடப்பட் டன.

கடந்த ஆண்டு பங்களா தேஷில் இடதுசாரியொருவர் கொலை செய்யப்பட்டதை யடுத்து, பல்கலைக்கழக மாண வர்கள் பலர் கைது செய்யப் பட்டது தெரிந்ததே. (வெ)

## எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு!

சென்னை, மார்ச். 15

தமிழ்நாடு அரசின் நுழைவு வரியை எதிர்த்து தி. மு. க. ஜனதா, இந்திரா காங்கிரஸ் கட்சி உட்பட 9 எதிர்க்கட்சி கள் சட்டப் பேரவையிலிருந்து நேற்றுமுன்தினம் வெளிநடப் புச் செய்தன. [வெ]

## கள்ளில் நச்சுத்தன்மை: ஒருவர் கைது!

சென்னை. மார்ச். 15

தமிழ்நாடு குமாரம்பேட் டையிலுள்ளலக்ஷ்மிபுரமென்ற இடத்தில் நச்சுத்தன்மை யுடைய கள்ளை அருந்திய இரு வர் மரணமானதுதொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள் ளனர்.

இது தொடர்பாக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட 35 பேரின் உயிருக்கும் எவ்வித ஆபத்துமில்லையென்றும் கூறப் பட்டது. (வெ)

## 2வது டெஸ்ட்: நியூசிலாந்து வெற்றி

லண்டன், மார்ச். 15

இலங்கை கிரிக்கெட் கோஷ் டிக்கும், நியூஸிலாந்து கிரிக் கெட் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற 2வது டெஸ்ட் போட்டியில், நியூசிலாந்துக் கோஷ்டி ஆறு விக்கட்டுகளால் வெற்றிபெற்றது.

ஸ்கோர் விபரம்: இலங்கை 240, 93. நியூசிலாந்து 201. 4 விக்கட்டுக்களுக்கு 134.

திட்டங்கள் தீட்டுவதுடன் நில்லாது

## செயலில் இறங்கி வெற்றிகாணவேண்டும்

### மகளிர் தினவிழாவில் பேச்சு

(யாழ்ப்பாணம்)

"அபிவிருத்தி சம்பந்தமான பிரசாரங்களைச் செய்வதிலோ விளம்பரம் செய்வதிலோ நாம் காலத்தை வீணடிக்காது நாட் டின் மூலவளங்களையும் மக்கள் சக்தியையும் பயன்படுத்தி அபிவிருத்தி நடவடிக்கைகளில் கவனம் செலுத்தவேண்டும். எமது மூலவளங்களையும் மனித சக்தியையும் எமது நாட்டில் உண வுப்பிரச்னையையும் வேலையில் லாப் பிரச்னையையும் தீர்க்க முடியும். இதற்கு திட்டங்கள் தீட்டுவதுடன் நாம் நில்லாது செயலில் இறங்குவதன்மூலமே வெற்றிகாணமுடியும்.

இவ்வாறு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் திரு. சி. பாலரத்தினம் இப்பிரிவு மக ளிர் தினவிழாவில் கலந்து கொண்டு தலைமையுரை யாற்றுகையில் தெரிவித்தார். ஊர்காவற்றுறை உதவி அர சாங்க அதிபர் பிரிவு மகளிர் தினம் செவ்வாய்க்கிழமை ஊர்காவற்றுறை புனித அந் தோனியார் கல்லூரி மண் டபத்தில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் திரு. பால ரத்தினம் தொடர்ந்து பேசு கையில் கடல்வளமும் பனைவள மும் நிறைந்த தொகுதி ஊர் காவற்றுறைத் தொகுதி இப் பகுதியில் பலதரப்பட்ட அபி விருத்தி நடவடிக்கைகள் மூலம் வேலைவாய்ப்பை ஏற்படுத்த முடியும்.

இப்பகுதியிலுள்ள எழுவை தீவுக் கிராமம் முழுமையான பனைவளம் நிறைந்த ஒரு கட லால் சூழப்பட்ட கிராமம் வறியமக்கள் வாழும் இடம் இது. இக்கிராமத்தில் பனைவள அபிவிருத்தியை மேற்கொள்வ தின்மூலம் பலருக்கு வேலை வாய்ப்பையும் உணவு உற் பத்தியையும் பெருக்கமுடியும். இங்கு பனஞ்சாராயவடிசாலை ஒன்றை உருவாக்குவதன் மூலம் வெளிநாட்டுக்கு ஏற்று மதி செய்யக்கூடிய வாய்ப்பு உருவாகும். இப்படியான இடங்களை இதுபோன்ற அபி விருத்திக்கு பயன்படுத்த பனை அபிவிருத்திச்சபை முன்வர வேண்டும் என்றார்.

கைத்தொழில் அபிவிருத்தி சபையின் யாழ். பிரதேசமுகா மையாளர் திரு. என். சோம சுந்தரஐயர் பேசுகையில் தமது பலத்தை அறியாமல் தொழில் நுட்பங்களை அறியாமல் அவற்றைச் சந்தைப்படுத்தும் வழிமுறைகள் தெரியாமல் கைத்தொழிலில் ஈடுபடுபவர்கள் அத்தொழிலில் முன்னேற்றம் காணமுடியாது. முன்னேற்றத்திற்கு பதிலாக மனவிரக்தியையும் வெறுப்பை யும் தேடவேண்டியநிலை இத னால் ஏற்படும். எனவே எந்த தொழிலைச்செய்ய முற்பட்டா லும் அதுதொடர்பான ஆலோ சனைகளையும் அனுபவங்களையும் அறியவேண்டும். இதற்கு கைத்தொழில் அபிவிருத்தி சபை இயங்குகிறது. இச்சபை யின் உதவியும் ஆலோசனையும் செயன்முறைப் பயிற்சியையும் கொடுக்க இச்சபை தயாராக இருக்கிறது என்றார்.

பனை அபிவிருத்திச்சபையின் சந்தைப்படுத்தும் உத்தியோ கத்தர் திரு. இ. சண்முகம் உட்பட மற்றும் பலர் பேசி னர். (வண். நிரு.)

சுயஉதவி வீடமைப்புத் திட்டம்:

## காக்கைதீவில் ஐம்பது வீடுகள் நிறுவப்படும்

(பண்டத்தரிப்பு)

சுய உதவி வீடமைப்புத்திட் டத்தின் கீழ் 50 வீடுகள் மானிப்பாய் தொகுதியிலுள்ள காக்கைதீவில் நிறுவப்படவுள் ளன. காக்கை தீவில் மானிப் பாய்த் தொகுதிக்கான மாதி ரிக்கிராமம் நிறுவப்படு மென்று முன்பு தெரிவிக்கப் பட்டபோதிலும் இப்போது அங்கு சுயஉதவி வீடமைப்புத் திட்டமொன்றே செயற்படுத் தப்படவிருப்பதாக தெரியவரு கின்றது.

சண்டிலிப்பாய் உதவி அர சாங்க அலுவலகத்தில் இவ் வீடுகளை பெற விண்ணப்பித்த வீடற்றவர்களின் விண்ணப் பங்கள் தற்போது பரிசீலிக்கப் பட்டு வருகின்றன.

வீடமைப்புத் திட்டத்தை எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் ஆரம்பிப்பதற்கான ஒழுங்கு களை யாழ். தேசிய வீடமைப்பு அதிகார சபையினர் மேற் கொண்டுள்ளனர். (க)

## ஜனாதிபதி நாடு திரும்பினார்

(கொழும்பு)

புதுடில்லியில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் 7வது உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட ஜனாதிபதி திரு.ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும், பாரி யாரும் நேற்று முன்தினமிரவு நாடு திரும்பினார்கள்.

விமான நிலையத்தில் இவர் களை பிரதம மந்திரி, சபாநாய கர், அமைச்சர்கள், பிரதி யமைச்சர்கள் ஆகியோர் வர வேற்றனர். (வெ)

## வேலணையில் சுப்பிரமுனியர்

(வேலணை)

அமெரிக்க சைவசித்தாந்த ஸ்தாபகர் ஸ்ரீ சுப்பிரமுனிய சுவாமிகளுக்கு வேலணையில் சிறப்பான வரவேற்பொன்று அளிக்கப்பட்டது.

வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலயத் தில் நடைபெற்ற இவ்வரவேற் புக்கு சண்முகநாதன் தலைமை தாங்கினார். சமய வேறுபாடின்றி அதிகமானோர் இவ்வரவேற்பில் கலந்து கொண்டனர்.

வரவேற்பு ஊர்வலம் வங் களாவடியில் இருந்து தொட ங்கி கோயிலை வந்தடைந்தது. (சூ)

## விசேட கப்பல் சேவை

(மன்னார்)

தலைமன்னார் துறைமுகத்தி லிருந்து கப்பல் மார்க்கமாக இந்தியாவுக்குச் செல்லும் பிர யாணிகளின் தொகை அதி கரித்ததால் கடந்த வியாழக் கிழமை அதிகாலை 3-30 மணிக்கு விசேட கப்பல் சேவை ஒன்று நடாத்தப்பட் டது.

இவ்விசேட கப்பலில் 905 இந்திய உல்லாசப்பிரயாணி கள் மட்டுமே பயணம் செய்த னர்.

வியாழக்கிழமை வழமை போல் நடைபெறும் கப்பல் சேவை பின்னர் மாலை 4 மணிக்கே நடைபெற்றது. (க)

**மணிவாக்கு**

எங்கே சந்தேகம் உளதோ அங்கு உண்மை உளது; அது அதனுடைய நிழல்.
—பிலிப் ஜேம்ஸ் பெய்லி

# நமது நோக்கு

## வடக்கின் அபிவிருத்தி

இலங்கையின் மற்றைய பாகங்களில் காணப்படும் பல பெரும் அபிவிருத்தித் திட்டங்கள் வடக்கில் மருந்துக்கும் இடையாதென்று இன்று நடைபெறும் பட்ஜெட் விவாதத்தில் மீண்டும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது எல்லா மாவட்டங்களுக்கும் வழங்கப்படும் பன்முகப் படுத்தப்பட்ட நிதியை ஆதாரமாகக் கொண்ட தொகுதிவாரி வேலைகளைப் பற்றியதல்ல.

மேனாட்டு நிறுவனங்களிடம் பெற்ற பெருந்தொகை உதவிநிதி, இலங்கையின் ஒரு முக்கியமான வடபகுதியை எட்டிப்பார்க்கவில்லையென்பதே தாத்பரியம்.

இன்றைய அரசியல் சூழ்நிலையில் இந்தமுறைப் பாட்டால் பயனுண்டாவென்று நினைப்பது நியாயமாகும்; ராணுவத்தால் முற்றுகையிடப்பட்ட பரதேசிப்பிரதேசமென்று கருதுபவர் பலர்.

அரசு கடைப்பிடிக்கும் பொருளாதாரக் கொள்கை இந்த நாட்டின் ஏழை மக்களுக்கு கணிசமான முன்னேற்றம் அளிப்பது நாம் காணக்கூடிய வருங்காலத்தில் முயற்கொம்பாகவே இருக்கின்றது.

'சில்லுக்குள் சில்லு' என்று ஆங்கிலத்தில் சொல்லுமாறு போல் இந்தக் கண்டாட்ட நிலையில், தமிழ் உரிமைகளுக்குப் போராடும் வடபகுதிக் தலைமை இயக்கம் அரசின் தயவு பெறுமென்று நம்ப இடமில்லை; எஜமானின் மேசையிலிருந்து இரண்டொரு இறைச்சித் துண்டுகள் எறியப்படலாம்.

இது எப்பவோ தெரிந்த விடயமாகையால், இப்பகுதி மக்கள் தங்கள் வீட்டைத் தாங்களே இயன்ற மட்டும் செப்பனிடுவது விவேகமானதும் அவசியமானதும்.

வடபகுதி மக்களின் கடந்த வரலாற்றை நோக்குமிடத்து, அந்நிய ஆட்சியில் —குறிப்பாக டச், பிரிட்டிஷ் ஆட்சியில், இப்பகுதிமக்கள் —சிறப்பாக யாழ்ப்பாண மக்கள், தங்கள் நிரந்தர வாழ்வுக்குரிய இருபெரும் அம்சங்களில் நிலைபெற்ற பலமுடையவர்களாக வாழ்ந்து வந்திருக்கின்றனர்.

ஒன்று ஜனத்தொகை; மற்றது நிரந்தர சமுதாய நிறுவனங்களும் அவற்றை ஒழுங்குபடுத்தி நடத்த உதவும் சட்டமரபும்.

இதன் விளைவாக, மக்கள் சொத்து, வீட்டுடன் உள்ள காணியாகவும், தோட்டக் காணியாகவும் கிராமத்துக்கப்புறம் உள்ள பயிர்நிலங்களாகவும், வாழ்க்கைக்கு வசதியளித்து வந்திருக்கிறது. வாழ்க்கை மரபு சீர்குலையாமற் பேணப்பட்டு வந்தது.

பிரிட்டிஷ் ஆட்சியில் இன்றுபோல், ஆங்கிலம் படித்தவர்கள் வெளிநாடு சென்று உழைக்கும் வசதியைக் குறிப்பாக மலாய்நாடுபோன்ற நாடுகள் உதவின. இது தமிழ் மக்களின் வாழ்வில் உருப்படியான பொருளாதார மாற்றத்தைக் கொண்டு வந்தது. இன்றும் அது இனங்காணக்கூடியவளவில் நிலைத்திருக்கின்றது.

விவசாயம், தொழில், மக்கள் ஊக்கத்தாலும் உழைப்பாலும் உயிர்பெற்றிருந்தன, நிலவளம், நீர்வளம் போன்ற இயற்கை வசதிகள் இல்லாத பூமியாகையாலும் நிதிவளம் எள்ளளவும் இல்லாத காரணத்தாலும் மனிதவளமே எத்துறையிலும் வடபகுதி மக்களை முன்னேறவைத்தது.

யாழ்ப்பாணப்புகையிலைக்கு இந்தியாவில் அன்றிருந்த கிராக்கி, - இன்று மிளகாய் வெங்காயம்போல் மனித உழைப்பின் மகத்துவத்தைக் குறிக்கின்றது.

இன்றுபோல் அன்றும், இவ்வித வளர்ச்சிக்கு முட்டுக்கட்டைகள் பல இருந்தன. சுதந்திரநாட்டில் இவைதொடர்வது தமிழ் மக்கள் துர்ப்பாக்கியமே.

எதனையும் முறியடித்து முன்னேறிப்போகும் சக்தி இப்பகுதி மக்களுக்கிருந்தமையால், ஏனைய பாகங்களைப்போல், இங்கு வறுமையோ அல்லது பெருஞ் செல்வமோ மக்கள் பண்பை எவ்வகையிலும் மயக்கிவிடவில்லை: கடும்வறுமைபெருஞ் செல்வம் என்ற தீவிரநிலை இங்கு என்றும் இருந்ததில்லை.

பலரின் வாழ்வுவறிய வாழ்வு; ஆனால் வறுமையிற் செம்மை தமிழ் மக்களின் பிறப்புரிமைபோல் காணப்பட்டது; செல்வர்கள் தானும்—பெரும் முதலாளிகள் இங்கு அன்றில்லை. ஆடம்பரமற்ற வாழ்வே வாழ்ந்து வந்தனர் இந்தப் பண்பாடு என்றும் இழப்பதற்குரியதல்ல.

இன்று – சுதந்திரமென்றதே பேச்சு—ஒருவிதமான அடிமைவாழ்வை உதறித்தள்ளும் ஆண்மையற்றவர் போல் வாழும் நிலைதென்படுவது சமூக அரசியல் தலைவர்களின் சிந்தனைக்கும் செயற்பாட்டுக்கும் உரியது. அரசியல்தாக்கம் பொருளாதார தேக்கம் முக்கிய காரணங்கள்.

வடபகுதி மக்களே இந்நாட்டின் கூட்டுறவு இயக்கத்துக்கு வளர்ச்சியளித்த பெருந்தியாகிகள்; இன்று நிலை எவ்வாறிருக்கு? இது மறுமலர்ச்சியடைந்தால் பொருளாதார நிலை பெரிதும் திருந்தும்.

இதுபோன்று, கல்வியிலும் மிக வேகமாக முன்னேறிய மக்கள், தொழில் நுட்பக்கல்வியைப் புறக்கணித்தமை எங்கள் பகுதியை எவ்வளவு தூரம் தாக்கியிருக்கிறதென்று கவலைப்படுகின்றனர்.

எந்தத்துறையிலும் திறமைக்கே முதலிடம் கொடுத்தநாம், போனபோன வழிகளிற் போவதல்லாமல், புதிய வழிகளை, உத்திகளை, உபாயங்களை, நாடநாணுவதற்கு இந்தக் குடாநாட்டுவாழ்வின் குறுகியமனப்பான்மையே காரணம். அரசுதிறமையைப் புறக்கணிக்கும் கொள்கைக்குப்பலியாகின்றோம்.

இதற்குப்புறநடை யாவர்கள் இல்லை என்பதல்ல.

சுருங்கச்சொல்லின், தமிழர்விடுதலை இயக்கம் அந்த முடிவைக்கண்டபோதும், இப்பகுதிமக்களின் தனிப்பட்ட திறமை கடின உழைப்பு காலமாற்றத்தில் சிதையாமல், அரசியல் சூழ்ச்சிக்கு இரையாகாமல், சுயமுயற்சியில், கூட்டுறவு திட்டங்களில் புத்தம்புதிய கலைகளில் பரிணமிக்க வழிகாண்பது தலைவர்களின் பொறுப்பு. இதனை நிர்ப்பந்திக்கவேண்டியது மக்களின் உரிமை.

உரிமைப்போர்தொடரட்டும், அதுவரையும் வாளாவிருக்கும் மனப்பாங்கு, சமூகத்துக்கும் நாட்டுக்கும் பெரும் நட்டமென்பதை அறிக.

மகான்கள் விட்டுச்சென்ற

# வைரங்களை விட்டு விட்டு வேறெதையோ தேடுகிறோம்!

நவீன உலகில் வாழும் மாந்தர்களை ஒரு புதியநோய் பிடித்துள்ளது. காலத்துக்குக் காலம் மகான்கள் ஞானிகள் இப்புவியிடை தோன்றி மக்களுக்கு நல்லதொரு வாழ்க்கை முறையை எடுத்துக்காட்டியுள்ளார்கள். உலகில் தொன்று தொட்டு தோன்றிய மகான்கள் எவராகிலும் தனித்தன்மையை நிலைநாட்டவில்லை. இவர்கள் மக்களை ஒரு கூட்டமாகப் பார்த்து, அன்போடு பேசி இதமாக உபதேசங்களை எடுத்துச் சொன்னார்கள். இன்று நம்மிடையே காணும் பெரிய நோய் என்னவெனில் மீண்டும் ஒவ்வொரு மகான்களின் பெயரைச் சொல்லிக் கொண்டு ஒரு கூட்டம் பேதத்தைக் கற்பிக்க முற்படுகிறது. இச்சந்தர்ப்பத்தில் ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்சரின் உபதேசங்களை சிறிது சிந்திப்போமானால் நாம் எவ்வளவு தூரம் பாதையைவிட்டுச் சென்றுவிட்டோம் என்று தெரியவரும்.

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரிடத்தில் மகேந்திரநாதர் என்னும் பெயர் பூண்ட ஒரு பாடசாலை ஆசிரியர் வந்து சேர்ந்தார். இவர் நம்மைப்போல் புத்தக அறிவினால் நாட்டம் உள்ளவர் முதல் முதலாக இறைவனைப் புத்தக அறிவால் கண்டுகொள்ள முடியாதென்பதையும் அறிவு என்பது இறைவனை அறியும் அறிவேயாகும் என்பதையும் புத்தக அறிவு அபரஞானத்தை அளிக்கவல்லது என்பதையும் அறியநேர்ந்தது. மீண்டும்பரமஹம்ஸரிடத்தில் சம்பாஷித்த பொழுதுதான் இறைவனிடத்தில் வைத்திருந்த அருவநம்பிக்கையும், பலர் வைத்திருக்கும் உருவநம்பிக்கையும் இரண்டும் சரி என்பதையும் தெட்டத்தெளிவாக அறிய நேர்ந்தது.

ணம் இளநீரும், கற்கண்டும் நிவேதித்து பிரார்த்தனை புரிந்தார். கேசவருடைய குடும்பத்தில் உள்ளவர்கள் குல ஒழுக்கத்தைவிட்டு, ஆங்கிலேயருடன் சம்பந்தம் செய்திருந்தார்கள். பலர் இதை நிந்தித்தபோதும் ஸ்ரீராமகிருஷ்ணர் கேசவருடைய ஈசுவர சிந்தனையால் கவரப்பட்டு இக்குறைகளை மறந்துவிட்டார். அக்காலத்தில் வாழ்ந்தஈஸ்வர சந்திர வித்தியாசாகரர் என்னும் கல்விக்கடலில் திளைத்த ஒருவரை சந்தித்துப்பேசுவதில்

-- சுவாமி சித்ரூபானந்தா --

(ஸ்ரீசாரதா தேவி ஆசிரமம்)

ஸ்ரீராம கிருஷ்ணர் வாழ்ந்த காலத்தில் கேசவசந்திரசேனர் என்னும் ஒரு பெரியார் இருந்தார். இவரின் எழுத்தின் மூலமேதான் பல அடியார்கள் ஸ்ரீராமகிருஷ்ணரை அறிய நேர்ந்தது. பரமஹம்சருடைய சகவாசமும் கிட்டியது. கேசவருக்கு ஒருமுறை உடலில் நோய் பிடித்தபோது ஸ்ரீராமகிருஷ்ணர் காளியிடம் இவருக்கு நற்சுகம் உண்டாகும் வண்ணம் ...

ஸ்ரீராமகிருஷ்ணர் ஆர்வம் காட்டினார்,

ஸ்ரீராம கிருஷ்ணரிடத்தில் குழந்தை உள்ளமும் எவரை சந்திக்கிறாரோ அவரிடத்தில் உள்ள சிறப்பைப் பார்க்கக் கூடிய பெருந்தன்மை படைத்தவராக இருந்தார். ஆகையினால்தான் பல மதத்தவர்கள், படித்தவர்கள், விஞ்ஞானிகள் பாமரர்யாவரும் பரமஹம்ஸரிடத்தில் சென்றார்கள். இனி உலகில் கவலையுள்ள விதவைகள், பிள்ளைகளை இழந்தவர்கள், மனக்கவலையுள்ளவர்கள் எவரும் அண்டி ஆறுதல் பெற்றார்கள்.

எம்மிடை பலர் சமய அனுஷ்டானங்கள் செய்கிறோம். ஏதோ ஒரு சங்கத்தில் அங்கத்தவராக இருக்கிறோம். பல காரியங்கள் செய்கிறோம். அமைதி கிட்டவில்லை. இன்னும் ஒரு சிலருக்காக ஆகிலும் சாந்தியைக் கொடுக்கமுடியவில்லை. இதன் முக்கிய காரணம்என்னவெனில் நம்முடைய மனம் விரிந்துசெல்லவில்லை. மிகமிக மனம் குறுகிக் கொண்டே போகிறது. மகான்

(5-ம் பக்கம் பார்க்க)

தவக்கால நற்சிந்தனை



## யேசு நமக்காக செபிக்கிறார்

"தந்தாய் நீர் என்னுள்ளும் நானும் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்களும் நம்முள் ஒன்றாய் இருக்கும்படி மன்றாடினேன்" — ஆனால் அவர்கள் இன்னும் ஒற்றுமையின் கருத்தை அறிந்துகொள்ளவும் இல்லை. புரிந்துகொள்ளவும் இல்லை அவர்களிடையே சண்டை, சச்சரவு கொலை, கொள்ளை, ஒற்றுமை இன்மை என்பன இன்னும் நிறைந்து அவர்களின் வாழ்வை திசை திருப்பிக் கொண்டிருக்கிறது. அவர்களுக்காக நான் உரிமை மன்றாடுகிறேன். ஏனெனில் அவர்கள் உம்முடையவர்கள். உமது பெயரால் அவர்களைக் காத்தருளும்" யேசுவே உமது செபத்திற்கு நன்றி. நாம் ஒற்றுமையின் வழி உம்மை அடைய துணைபுரியும்.

அருட்செல்வன் ம. ரூபன்

# மக்கள் கருத்து

## வித்தியாலயத்துக்கு காணி சுவீகரித்தல்

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்துக்கு அருகிலுள்ள காணியை அம்மகா வித்தியாலயத்துக்கு விளையாட்டு மைதானமாகச் சுவீகரிப்பது பற்றிய விடயம் ஒன்று 3-3-83 திகதிய ஈழநாடு பத்திரிகையில் காணப்பட்டது. இது விடயமாக சங்கானை கிழக்கு கிராமோதய சபை காணிச் சொந்தக்காரரான திரு. இரங்கநாதன் அவர்களுடன் தொடர்பு கொண்டு குறிப்பிட்ட காணியை மகாவித்தியாலயத்திற்குக் கொடுப்பதற்குச் சம்மதக் கடிதத்தைப் பெற்று, சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரிகளிடம் கையளித்தது. அவர் தமது சம்மதக்கடிதத்தில், இக் காணி தன்னுடையதென்றும், இதில் யாராவது உரிமை கோரினால் நீதிமன்றத்தீர்ப்பின்படி தமது பங்கைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் குறிப்பிட்டிருந்தார்,

காணியோடு சம்பந்தப்பட்ட கோயில் தனியார் காணியில் அமைந்துள்ளது. இக்கோயில் கடந்த 30 ஆண்டுகளாக ஆலயப்பிரவேசம் காரணமாகப் பூட்டப்பட்டிருந்தது. இது பொதுமக்கள் வழிபாட்டுத்தலமாக இருந்ததில்லை என்பதற்கு இது ஒன்றேசான்றாக உள்ளது. இக்கோயில் ஒரு சிலருக்கு வழிபாட்டுத் தலமாக இருந்திருக்கலாம். மகாவித்தியாலயத்துக்கு இக் காணி சுவீகரிக்கப்படும் பொழுது இக் கோயில் மேலும் சிறப்புடையதாக விளங்கும்என எமது கிராமோதய சபை நம்புகிறது. பூட்டப்பட்டுக்கிடக்கும் கோயிலைத் திறந்து மாணவர்கள் தினமும் வழிபாடு செய்வார்கள். பொதுமக்கள்விசேட பூசைகளையோ விழாக்களையோசெய்து வந்திருப்பாராயின் தொடர்ந்தும் அவர்கள் அவற்றினைச் சிறப்புடன் செய்துவர மகாவித்தியாலய நிர்வாகம் எவ்வகையிலும் தடையாகவிருக்காது. இம்மகாவித்தியாலயத்திற்கென ஒருகோயில் இல்லை. எனவே அக்குறையைப் போக்குவதுடன் தொன்றுதொட்டுப் பொதுமக்கள் வழிபட்டு வந்திருப்பாராயின் அவர்களுக்கும் காணியைச் சுவீகரிக்கும் முயற்சி திருப்தி அளிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

கோயில் வழிபாட்டுக்குக் காணிச் சுவீகரிப்பு குந்தகம் விளைவிக்கும் எனக்குரல் எழுப்புவது அக்காணி மகாவித்தியாலயத்துக்காகச் சுவீகரிக்கப்படுவதைத் தடுக்கும் ஒரு சாராரின் உபாயமாகும் என்பதை எமது கிராம மக்கள் அறியாமலில்லை. எனவே இம் முறற்சியைக் கைவிட்டு மகாவித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு உதவுமாறு கிராம மக்கள் சார்பில் இவர்களைக் கிராமோதயசபை அன்பாகக் கேட்டுக்கொள்ளுகிறது

நா. இராசா,
தலைவர்,
கிராமோதயசபை.
சங்கானை கிழக்கு.

## மருந்துவகைகள் விநியோகம்

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு இவ்வருட முதலாவது காலாண்டிற்கான மருந்துவகைகளை யாழ். சுகாதார பிரிவு மருந்துக் களஞ்சியப்பகுதியினர் இம்மாதம் தொடக்கம் நேரடியாக விநியோகம் செய்ய ஆரம்பித்துள்ளனர்.

# அரசபதவி வெற்றிடங்கள்

## பாதுகாப்பாளர் பதவி

வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம். வன ஜீவராசிகள் பாதுகாப்பாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரி க. பொ. த (சாதாரண] உயர்தரப் பரீட்சையில் சித்தியும், விலங்கியல், தாவரவியல் பற்றிய அறிவும் தேவை. வயதெல்லை 18 தொடக்கம் 40 வரை விண்ணப்பிக்க. கடைசித் திகதி மார்ச் 31ம் திகதி விபரங்களுக்கு மார்ச் 4ம் திகதி வர்த்தமானி பார்க்கவும்.

## சாரதி பதவி

தேசிய நூதனசாலை திணைக்களத்தில் சாரதி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரி 5ம் வகுப்பில் சித்திபெற்றிருப்பதுடன் சாரதியாக 3 வருட அனுபவமும் தேவை. வயதெல்லை 21 தொடக்கம் 45 வரையாகும் விண்ணப்பிக்க. கடைசித் திகதிமார்ச் 31ம் திகதி விபரங்களுக்கு மார்ச் 4ம்திகதி வர்த்தமானி பார்க்கவும்.

## வரவேற்பாளர் பதவி

தகவல் திணைக்களத்தில் வரவேற்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரி க.பொ. த. [சாதாரண) சித்தியும் உயர்தரப் பரீட்சையில் சித்தியும் பெற்றிருப்பதுடன் ஆங்கிலம், சிங்களம் ஆகியவற்றிலும் வளம் பெற்றிருக்கவேண்டும். வயதெல்லை 18 தொடக்கம் 40 வரையாகும். விண்ணப்பிக்க. கடைசித் திகதி மார்ச் 25ம் திகதி விபரங்களுக்கு மார்ச் 4ம் திகதி வர்த்தமானி பார்க்கவும். (சு)

# 'கோதுமை உற்பத்தி வீரர்' பட்டம் பெற்றார்!

(பண்டத்தரிப்பு)

''யாழ் மாவட்டத்தில் நாம் பரீட்சார்த்தமாக செய்கை பண்ணிய கோதுமைப்பயிர் நூறு வீத பூரணமான விளைச்சலைத் தந்துள்ளது. இனி எமது விவசாயிகள் அதிக வாபம் தரத்தக்க இந்த கோதுமையை துணிந்து செய்கை பண்ணலாம். வரண்ட பிரதேசத்திற்கு ஏற்ற பயிரான கோதுமையை மானாவாரிச் செய்கையாக எமது யாழ். மாவட்டத்தில் பயிரிட்டு அதிக பிரயோசனத்தை பெறலாம். இதற்கு வேண்டிய சகல உதவிகளையும் ஒத்துழைப்பையும் செய்துதர எமது விவசாயப் பகுதியினர் தயாராக இருக்கின்றனர்'' இவ்வாறு தொல்புரம் கமநலச் சேவைப் பகுதியிலுள்ள சம்பாவை கிழக்கு தொட்டிலடி என்னுமிடத்தில் நடைபெற்ற கோதுமை அறுவடை விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் யாழ். உதவி விவசாய உத்தியோகத்தர் திரு. எஸ். பரமானந்தம் குறிப்பிட்டார்.

இவ்வைபவத்தில் தொழில் அதிபர் திரு. கனகராசா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு நல்ல கோதுமை விளைச்சலைப் பெற்ற விவசாயியான சுப்பிரமணியம் சிவராவுக்கு பொன்னாடை போர்த்தி ''கோதுமை உற்பத்தி வீரர்,' என்ற பட்டத்தையும் வழங்கினார். மண்வெட்டி, தொப்பி போன்ற பொருட்களையும் திரு. கனகராசா அவருக்கு அன்பளிப்பாக வழங்கினார்.

இவ்விழாவில் யாழ். மாவட்ட பயிர்ப் பாதுகாப்புக்கு பொறுப்பான அதிகாரி திரு. கே. எஸ். நடராசா தொல்புரம் விவசாயப் போதனாசிரியர் திரு. ஈ.ஜெயவீரசிங்கம், பண்டத்தரிப்பு பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு. சபா நாராயணன், வலி மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. செந்தில்வடிவேல் ஆகியோர் உட்பட மற்றும் பலர் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். இறுதியில் பண்டத்தரிப்பு பிரிவு விவசாய விரிவாக்க சேவையாளர் திரு. வை. பாலகிருஷ்ணன் நன்றியுரை நிகழ்த்தினார்.

# ரூபவாஹினியில் இன்று

மாலை

6-00 இன்றைய நிகழ்ச்சிகள்
6-01 சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்)
6-30 முதலுதவி
6-43 'சைவநீதி' இந்துமத நிகழ்ச்சி
7-00 செய்தி மஞ்சரி (தமிழ்)
7-14 நாளைய நிகழ்ச்சிகள்
7-15 'ஜென்டில் பென்' (ஆங்கில நிகழ்ச்சி)
7-45 கண்டியில் நடைபெற்ற விஞ்ஞான, தொழில்நுட்பக் கண்காட்சி பற்றிய விவரணச் சித்திரம்.
8-15 செய்திமஞ்சரி (சிங்களம்)
8-50 தமிழ்ப்படம் 'உயர்ந்த மனிதன்'
9-30 செய்தி மஞ்சரி (ஆங்கிலம்)
9-45 திரைப்படதொடர்ச்சி
11-30 நிகழ்ச்சிகள் முடிவு.

# "தொழுநோயை முற்றாக அகற்ற வேண்டும்"

(பண்டத்தரிப்பு)

''எமது யாழ். மாவட்ட சுகாதாரப் பிரிவில் மொத்தம் 103 தொழுநோயாளர்கள் இருக்கின்றனர். இவர்களில் 62பேர் சுழிபுரம்பகுதியிலுள்ள காட்டுப்புலம், குடாக்கனை ஆகிய கிராமங்களில் இருந்து வருகின்றனர். இந்நோயாளர்களுக்கு தக்க சிகிச்சைகளை வழங்கி ஏனைய மக்களுக்கும் இந்நோய் பரவாதவாறு பாதுகாக்கவேண்டியது எமது உடனடிக் கடமையாகும். நாம் இதில் கவலையீனமாக இருந்தால் பிற்காலத்தில் எமது சந்ததியினர் மிகவும்பாதிக்கப்படலாம். ஆகவே எமது சுகாதாரப் பகுதியினருடன் பொது மக்களும் எம்முடன் ஒத்துழைத்து இந்தக்கொடிய நோயை இப்பகுதியிலிருந்து அகற்ற பாடுபடவேண்டும்''

இவ்வாறு யாழ். மாவட்ட சுகாதார சேவை கண்காணிப்பாளர் டாக்டர் கே. மாணிக்கம் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்தில் நடைபெற்ற சுழிபுரம் பகுதியில் பரவியுள்ள தொழுநோய் பற்றிய கருத்தரங்கிற்கு தலைமைவகித்து உரைநிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

இலங்கை தொழுநோய் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் சுழிபுரம் பகுதியிலுள்ள பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் பொது நல இயக்கங்கள், நலன்விரும்பிகள் உட்பட பெருந்தொகையானோர் கலந்துகொண்டனர்.

யாழ். மருத்துவ பீடத்தைச் சேர்ந்த வைத்திய கலாநிதி என். சிவராஜா உரையாற்றுகையில் தொழுநோயின் ஆரம்ப அறிகுறிகள் பற்றியும் நோய் முற்றினால் மனித உடலுக்கு ஏற்படும் பாதிப்புகள் பற்றியும் படங்கள் மூலம் விளக்கமாக எடுத்துக்கூறினார்.

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத் தலைவர் திரு. இ. விஜயரத்தினம் யாழ். அரசினர் வைத்தியசாலை வைத்தியஅத்தியட்சகர் டாக்டர் எஸ். நச்சினார்க்கினியர், சுழிபுரம் சுகாதார அபிவிருத்திச் சபையின் செயலாளர் திரு. எஸ். சிவரஞ்சன் ஆகியோர் உட்பட மற்றும் பலர் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டு உரைநிகழ்த்தினார்கள்.

## காரைநகரில் முதியோர் தினவிழா

(பண்டத்தரிப்பு]

காரைநகர் வடக்கு காரைநகர் மேற்கு காரைநகர்கிழக்கு ஆகிய மூன்று கிராமோதய சபைகள் இணைந்து நடாத்தும் முதியோர் தினவிழா எதிர் வரும் சனிக்கிழமை காரைநகர் யாழ்டன் கல்லூரியில் நடைபெறவுள்ளது. பிரதேச சபைத்தலைவர் திரு. வி. சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம அதிதியாக வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி, திரு. நீலன் திருச்செல்வம் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக யாழ். தொகுதி எம். பி. திரு. வி. யோகேஸ்வரன், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா ஆகியோர் கலந்துகொள்வார்கள். இவ்விழாவில் முதியோர்களுக்கு அன்பளிப்புகளும் வழங்கப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## கோதுமை அறுவடை

(கரவெட்டி)

''விவசாயப் பகுதியினரால் பரீட்சார்த்தமான முறையில் உற்பத்தி செய்யப்படும் பயிர்கள் தோட்டக் காணிகளில் மாத்திரம் உண்டுபண்ணாது வயல் பகுதி மேட்டு நிலப்பகுதிகளிலும் பயிரிட்டு வான்பயிராக உற்பத்தி செய்து பார்க்க முன்வரவேண்டும்''

இவ்வாறு கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. இ. ஐயாத்துரை கரணவாய்ப் பகுதியில் பரீட்சார்த்தமான முறையில் உற்பத்தி செய்யப்பட்ட 'கோதுமை' அறுவடையை ஆரம்பித்துப் பேசுகையில் கேட்டுக் கொண்டார்.

புலோலி விவசாயப் பகுதியினரின் ஆதரவுடன் இக் கோதுமை அறுவடை செய்யப்பட்டது.

யாழ். விவசாய திணைக்களத்தைச்சேர்ந்த திரு. பொன்னையா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

புலிபாஞ்சான்

## தாம்போதி நிர்மாணவேலை

(மன்னார்)

மன்னார் - புலிபாஞ்சான் தாம்போதி பாலத்தின் நிர்மாண வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது இதற்கென பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ இராசதுரை நாலரைலட்சம்ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார். [க]

## அனாதைப் பிள்ளைகளுக்கு விசேஷ அக்கறை

[மானிப்பாய்]

திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலையம் அவ்வூர் மாணவர்களின் நலன் கருதி மாணவர்களுக்கென வகுப்புகள் நடத்த தீர்மானித்துள்ளது.

இதனைச் செயல்படுத்து முகமாக இவ்வூர் ஆசிரியர்களைக் கொண்ட கருத்தரங்கு ஒன்று நடத்தப்பட்டது. இவ்வகுப்புகளில்அனாதைப் பிள்ளைகளுக்கு விசேட அக்கறை செலுத்தப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வித சேவையைச் செய்வதற்கென பதினைந்து ஆசிரியர்கள் முன்வந்து சம்மதம் தெரிவித்துள்ளார்கள்.

இதற்கு திரு சு. பசுபதி பொறுப்பாகவும் திரு. ம. முத்துலிங்கம் ஆலோசகராகவும் செயல்பட்டு வருகின்றார்கள்.

## கடத்தல் முயற்சி முறியடிப்பு

[மன்னார்]

இலங்கையிலிருந்து தலைமன்னார் கப்பல் மார்க்கமாக தாயகம் செல்லும் பிரயாணிகளின் பொதிக்குள் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை மறைத்து வைத்து இந்தியாவுக்குக் கடத்திச்செல்ல எடுத்த முயற்சி முறியடிக்கப்பட்டது.

இரகசியத் தகவல் ஒன்றையடுத்து கடந்த சனிக்கிழமை தாயகம் செல்ல விருந்த பிரயாணிகளின் பொதிகளைச் சோதனையிட்ட போதே இந்தியாவுக்குக் கடத்திச் செல்லவென மறைத்து வைக்கப்பட்டிருந்த 10ஆயிரம்ரூபா பெறுமதியான வெளிநாட்டுத் துணிவகைகளும்,குடைகளும் கண்டு பிடிக்கப்பட்டது.

இக்கடத்தல் முயற்சி பற்றி விசாரணை நடத்திய உதவி சுங்க கலெக்டர் கடத்தல் பொருட்களை பறிமுதல் செய்து தாயகம் செல்வோரை கப்பலில் பயணம் செய்ய அனுமதித்தார். [க]

"ஆசிரியர் சேவையில்

# ஒப்பந்த அடிப்படை நியமனங்களை நிறுத்துக"

(யாழ்ப்பாணம்)

அறுபது வயது பூர்த்தியான ஒய்வு பெற்ற ஆசிரியர்களை மீண்டும் ஒப்பந்த அடிப்படையில் ஆசிரியராக நியமிக்கும் நியமனங்களை கல்வி அமைச்சு உடனடியாக நிறுத்த வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் சேவையிலிருந்து ஒய்வுபெறும் ஆசிரியர்களின் இடத்தை அதே ஆண்டில் கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்படும் நியந்தனையின்படி ஆசிரிய நியமனங்களைக் கல்வி அமைச்சு நியமனஞ்செய்யவேண்டும்.

இலங்கை வித்தியாலய தமிழ் அதிபர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் ஒன்றில் மேற்கண்டவாறு நிறைவேற்றப்பட்டுள்ளது.

பலாலி அரசினர் வித்தியசாலையில் நடைபெற்ற இலங்கை வித்தியாலய தமிழ் அதிபர் சங்கத்தினால் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு!

அதிபர்களுக்குப் பதவி உயர்வு வழங்கும் போது; கொடுக்கும் பதவி உயர்வின் தரத்திற்கு மேல் வேதனம் பெறுபவராயின் அத்தரத்திற்கு அடுத்த பதவி உயர்வு வழங்கப்படவேண்டும்.

5ம், 4ம் தர அதிபர் பதவிகளை ரத்துச்செய்து 3ம் தர அதிபராகவும் 3ம் தர அதிபர்களில் தகுதியானோர் கல்விச் சேவையின் 5ம் தரத்துக்கு உயர்த்தப்படல்வேண்டும். இந்நடைமுறைக்கு காலம்தாழ்த்தப்படுமாயின்; 5ம் தர அதிபர்களாக உள்ளவர்கள் 4ம்தர அதிபராக நியமிக்கப்படவேண்டும். தற்காலிகஅதிபர்கள் நிரந்தரமாக்கப்படும்போது 4ம் தர அதிபர் பதவி வழங்கப்படவேண்டும்.

1978ல் அதிபர்தர உயர்வுப் பரீட்சையெடுத்தோருக்கு நேர்முகப்பரீட்சைக்கு அழைத்தே 4ம், 5ம் தர அதிபர்கள் பதவிக்கு நியமிக்கப்படுவதால் தற்போது சேவையிலுள்ள 4ம் தர அதிபர்கள் யாவரும் 5 ஆண்டு சேவைபூர்த்தியின் பின்பு அவர்கள் எத்தரமுள்ள பாடசாலையில் கடமைஆற்றினாலும் பாடசாலையின் தரத்தைக் கவனிக்காது குறைந்த பட்சம் 3ம்தரஅதிபர் பதவிக்கு நியமிக்கப்படல்வேண்டும்.

## தமிழ் அதிபர் சங்க நிர்வாகிகள்

[யாழ்ப்பாணம்]

இலங்கை வித்தியாலயதமிழ் அதிபர் சங்கத்தின் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு பெற்றோர் விபரம் வருமாறு:-

தலைவர்: க. சோமசுந்தரம் செயலாளர்; அ. கருணாநிதி, பொருளாளர்: க.வேணுகோபாலு, உபதலைவர்;சு முத்தையா, உபசெயலாளர்: வே.தனபாலசிங்கம், நிர்வாகசபைஉறுப்பினர்களாக தெரிவு பெற்றோர்:- மே. நாகராசா, ச. தம்பையா, ச.பொன்னம்பலம், த.வேலுப்பிள்ளை, க. செல்லையா, ந. தணிகாசலம், திருமதி ஞா.நவரத்தினம்.

## தலைவராக தெரிவு

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு கிராமோதய சபையின் புதிய தலைவர் தெரிவு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் விசேட சேவை அலுவலர் திரு என். அல்பிரட் தலைமையில் நடைபெற்ற போது திருமதி பேபி அத்தனாசியார் மீண்டும் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## வைரங்களை....

(4-ம் பக்கத் தொடர்ச்சி]

கள் விட்டுச்சென்ற வைரங்களை விட்டுவிட்டு எதையோ தேடுகிறோம். மனம் விரிந்து செல்லவதால் நாம் போடும் ஆரவாரத்தால் ஆவதென்ன?

ஸ்ரீராமகிருஷ்ணர் மிகவும் விரும்பிப் படிக்கும் ஒரு சில வரிகளை மீண்டும் படித்துப் புத்துயிர் பெறுவோமாக.

''மூழ்குக மூழ்குக மூழ்குக மனமே
முழுமுதற் பொருளின் அழகெனும் கடலில்
ஆழமாய்ச் செல்லுக, அலைகளின் அடியில்,
அன்பெனும் மணிகள் அகப்படும் உனக்கே
வழியினைக் காட்டும் விழுப் பொருள் எதுவோ?
அந்தச் செம்பொருள் குருவின் திருவடி எல்பேன்-
அதனை அநுதினம் தொழுவாய் அக்கரை சேர்வாய்.''

தாலிக்கொடி கொள்ளை வழக்கு:

# இருதரப்பினர் சம்மதத்துடன்

## சமாதானமாக இணங்கப்பட்டது!

[புலோலி நிருபர் திருச்செல்வம்]

அல்வாய் கொள்ளைவழக்கில் 1ம் எதிரிக்கு எதிராகச் சாட்டப்பட்டிருந்த கொள்ளைக் குற்றச் சாட்டைபொலிசார் வாபஸ் பெற்றனர்.

1ம் எதிரி அக்குற்றச்சாட்டிடிலிருந்து நீதிமன்றத்தால் விடுதலைசெய்யப்பட்டார். இவ்வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் விசாரணைசெய்யப்பட்டது.

இவ்வழக்கில் அல்வாய் மேற்கைச்சேர்ந்த கமலமணியம்மாவின் வீட்டிற்குள் அத்துமீறிப் பிரவேசித்து வாளால்வெட்டி தாலிக்கொடி சங்கிலி என்பன வற்றைக் கொள்ளையடித்தாக அதே இடத்தைச்சேர்ந்தஎஸ். வேலாயுதம் கரவெட்டி கிழக்கைச்சேர்ந்த க. இரத்தினம். அல்வாய் மேற்கைச்சேர்ந்தவர்களான சி. சிவலிங்கம் க. புஸ்பராணி இ. வள்ளிப்பிள்ளை ஆகியோர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

வழக்கைத் தாக்கல் செய்த பருத்தித்துறைப் பொலிசார் சார்பில் பொலிஸ் சார்ஜன் இவ்வழக்கில் ஏற்கனவே கொடுத்த சாட்சியங்களின் பிரகாரம் 1ம் எதிரிக்கு எதிராகச் சாட்டப்பட்ட கொள்ளையடித்தமை என்ற குற்றச் சாட்டை வாபஸ் பெறுவதற்கு அனுமதி கோரினார்.

இவ்வழக்கில் பொலிசார் கொள்ளையடித்தது என்ற குற்றச்சாட்டின் பேரில் பிராது தாக்கல் செய்தது ஒருதவறு என்று நான் கூறுகின்றேன். குறிப்பாகஅவர்கள்இவ்வழக்கு சம்பந்தமாக சமர்ப்பித்த அறிக்கையின் பிரகாரம் அது பிழைஎன்று தெரிகின்றது. ஆகவே இக் கொள்ளை என்ற குற்றச்சாட்டை வாபஸ்பெறுவது மிகவும் சரியான செயல் என்று நான் கூறுகின்றேன், எனவேநான் இக்குற்றச் சாட்டை வாபஸ் பெறுவதற்கு செய்த விண்ணப்பத்தை அனுமதிக்கின்றேன் என்று குறிப்பிட்ட நீதவான் 1ம் எதிரிக்கு எதிராக சாட்டப்பட்ட குற்றச் சாட்டிற்கும் அவரை நான் விடுதலை செய்கின்றேன் என்றுஅறிவித்தார்.

இவ்வழக்கில் முறைப்பாட்டுக்காரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி திரு. சோமசுந்தரம் முறைப்பாட்டுக்காரர்கள் இவ்வழக்கில் சமாதானமாகப் போவதற்கு விரும்புவதாகத் தெரிவித்தார். 1ம். 2ம் சாட்சிகள் இனிமேல் இதுசம்பந்தமாக எவ்வித பிரச்னையும் தங்களுக்குவராது என்று மன்றில் உத்தரவாத மளிக்கும்பட்சத்தில் தாங்கள் இவ்வழக்கில் சமாதானமாகப் போவதற்கு விரும்புவதாக மன்றுக்குத் தெரிவித்தார்கள்.

எதிரிகளுக்காக ஆஜரான சட்டத்தரணி தம்பிரத்தினமும் திரு ஸ்ரீசிவாயவும் தாங்கள் தங்கள் எதிரிகளுக்கெதிராகச் சாட்டப்பட்ட குற்றச் சாட்டை மறுத்து இவ்வழக்கில் சமாதானமாகப் போவதற்கு எதிரிகளுக்குப்புத்திமதி கூறுவதாகத் தெரிவித்தனர். அத்துடன் தவறான முறையில் பொய்யான முறையில் 1ம் எதிரிக்கெதிராகச் சாட்டப்பட்ட கொள்ளைக்குற்றச்சாட்டைப் பொலிசார் வாபஸ் பெற்ற படியால் தாங்கள் இவ்வழக்கை இணங்கச் சம்மதம் தெரிவிப்பதாகக் கூறினார்கள். 5 எதிரிகளும் வழக்கை சமாதானமாக விடுவதற்கு சம்மதம் தெரிவித்தனர். வழக்குச் சமாதானமாக விடப்பட்டது.

இந்தக் கட்டத்திலே வழக்குத்தொடுநர் சார்பில் தெரிபட்ட சட்டத்தரணி சோமசுந்தரம் தன்னுடையகட்சிக்காரர்களுக்கும் இந்த வழக்கின் எதிரிகளுக்கும் வழக்குகளும் எதிர்வழக்குகளும் பல இருக்கின்றபடியால் அப்படியான பல வழக்குகளிலும் எந்த வழக்குகளிலும் உள்ள எதிரிகளை மன்று வழமையாகச் செய்வது போன்று தர்மப்பணம் கொடுப்பதற்கு சம்மதமில்லை என்று கூறினார்.

எதிரிகளின் சட்டத்தரணிகளான திரு. தம்பிரத்தினமும் திரு. ஸ்ரீசிவாயவும் சட்டத்தரணி திரு. சோமசுந்தரத்தின் கூற்றை ஆதரிக்கும்அதே நேரத்தில் இந்தவழக்கிலுள்ள எதிரிகளும் மற்றைய வழக்கிலுள்ள எதிரிகளும் தர்மப்பணம் கொடுக்கும்படிகட்டளையிடும்பட்சத்தில்தற்போதுள்ள சூழ்நிலையை மேலும் மோசமாகக் கூடும்என்றும் கூறினார்கள். வழக்கு இணங்கப்பட்டது.

## சொந்த மாவட்டங்களில். சேவையாற்ற பணிப்பு

(மானிப்பாய்)

1978-ம் ஆண்டு நடைபெற்ற நான்காம், ஐந்தாம் தர அதிபர் பதவி உயர்வில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் பலர் வெளிமாவட்டங்களில் சேவையாற்றுமாறு கேட்கப்பட்டனர்.

இந்நியமனத்தை ஏற்றுக் கொள்ளாது பதவி உயர்வு பெற்றோர் கல்விச்சேவைக் கமிஷனுக்கு மேன்முறையீடு செய்தனர்.

தற்போது வெளிமாவட்டம் போகுமாறு கேட்கப்பட்ட சில அதிபர்களுக்கு, அவர்களது சொந்த மாவட்டத்திலேயே கடமை ஆற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவர்களது அதிபர் நியமனம் 1978 மார்ச் 31-ம் திகதியிலிருந்து அமுலுக்கு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிபர் திடீர் இடமாற்றம்:

## மாணவர்கள் பகிஷ்கரிப்பு நீடிப்பு!

(மன்னார்)

மன்னார் – சூரிய கட்டைக்காடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் அவசரத்தந்தி மூலம் முள்ளிக்குளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு இடமாற்றம் செய்ததையடுத்து சூரிய கட்டைக்காடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவர்கள் வகுப்புகளை பகிஷ்கரித்து வருகின்றனர்.

சூரியகட்டைக்காடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபரான திரு. அ. செபமாலை என்பவரே இடமாற்றம் செய்யப்பட்டவராகும்.

இடமாற்றம் செய்ததையடுத்து கடந்த புதன்கிழமை முதல் வகுப்புகளை பகிஷ்கரித்துவருகின்றனர். இப்பகிஷ்கரிப்பு தொடர்ந்து நடைபெறுமென மாணவர்களும், பெற்றோர்களும் அறிவித்துள்ளனர்.

சூரிய கட்டைக்காடு அரசினர் தமிழ்கலவன் பாடசாலையில் கற்கும் மாணவி ஒருத்தி வேறு பாடசாலையில் சேர்ந்து படிப்பதற்காக தனது கல்விச் சான்றிதழைக் கேட்டதாகவும், அதிபர் சான்றிதழ்களைக் கொடுக்க மறுத்ததன் எதிரொலியாகவே அவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளாரென தெரிவிக்கப்படுகிறது.

இடமாற்றம்செய்யப்பட்டுள்ள சூரிய கட்டைக்காடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபரின் இடமாற்றத்தை ரத்துச் செய்து இப்பகுதி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு நானாட்டான் பிரதேச சபைத் தலைவர் திரு. எம். செபஸ்தியாம்பிள்ளை. மூதூர் எம். பியும், மன்னார் மாவட்ட அமைச்சருமான ஜனாப் எம். ஈ. எச். மஹ்றூப், மன்னார் எம், பி. திரு. பி. எஸ். சூசைதாசன், மன்னார்மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. பி. எம். செபமாலை, மன்னார் மாவட்ட கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கு அவசரத் தந்திகளை அனுப்பிவைத்துள்ளார். (க)

## "பனைகளின்பயனை மக்கள் இப்போது உணருகின்றனர்"

(நெடுந்தீவு)

"நெடுந்தீவு மக்கள் பனம் பொருள் உற்பத்தியில்போதிய அளவு ஆர்வம்காட்டினால் இத்தீவகத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு இங்குள்ள பனைகளே பெரிதும்உதவியளிக்கும். சுமார் 25 ஆயிரத்திற்கு மேற்பட்ட பனைகள் இங்கிருந்த போதும் இப்போதுதான் அதன் பயனை மகளிர்குழுக்களின் மூலம் மக்கள் உணர்கின்றனர் பனையில் இருந்து பெறக்கூடிய அனைத்துப்பிரயோசனங்கள் குறித்தும் பல்வேறு ஆய்வுகளை நடாத்த பனை அபிவிருத்திச் சபை ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது."


இவ்வாறு நெடுந்தீவு மகளிர் தின விழாவில் உரையாற்றிய பனை அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. எஸ். கோகிலராஜ் கூறினார்.

நெடுந்தீவு பல நோ. கூ. சங்கத்தலைவர் திரு. என். இராமச்சந்திரன் நெடுந்தீவில் மகளிர்குழு மிகவும் சிறந்த முறையில் பனம் பொருள் அபிவிருத்தியில்ஈட்டுபட்டுள்ளதென்றும் அதற்கு பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. நடராசா அவர்கள் எமக்கு அளித்துவரும் ஆக்கமும் ஊக்கமுமேகாரணம் வடபகுதியில் மிகப்பாரிய பொருளாதார உயர்வுகளை மக்களுக்கு அளிப்பதில் எவ்வாறு உதவலாம் என்பதில் சிரத்தையாக இருந்து அவர் செயற்பட்டுவருவது பாராட்டுக்குரியது நெடுந்தீவில் இத்துறைவளர அவரது ஆர்வமே காரணமாகும் என்று தெரிவித்தார்.

சங்கப் பொதுமுகாமையாளர் திரு. இரா. தர்மலிங்கம் பல்வேறுபயிற்சிகளின் மூலம் மகளிர் இத்தீவகத்திற்குத் தொண்டாற்றவேண்டும் என்றார்.

திருமதி த. முத்துப்பிள்ளை தலைமையில் நடைபெற்றமேற்படி கூட்டத்தில் நெடுந்தீவு மகாவித்தியாலய உதவி அதிபர், திருமதி பி. எம். ஜெகன்ரனி கிராமோதயசபைத் தலைவர் திரு. க. அந்தோனிப்பிள்ளை செல்விகள் டெய்சி அல்பிரட் ப. மன்ரேசா திரு. க. சதாசிவம் உட்படப் பலர் உரையாற்றினார்கள்.

## சுதுமலை கிராமோதய சபைத்தலைவர்




(மானிப்பாய்)

பல்கலைமணி திரு. க. தம்பிராசா சுதுமலை கிராமத்தின் கிராமோதயசபைத் தலைவராகப் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளார். யாழ். மாவட்ட சமாதான நீதவானாகிய இவர் சிறந்த சமூகசேவையாளரும் கலைஞருமாவார்.

திரு. தம்பிராசா ஆனைக்கோட்டை அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை அதிபராக தற்போது பணிபுரிந்து வருகின்றார்.


## மீண்டும் கிடைக்கின்றது




## ஜப்பானிய பம்ப் தொழில் நுட்பமும் அமெரிக்க என்ஜினும்.

"டெர்க்காய்" தன்இயக்க விவசாய நீர் இறைக்கும் இயந்திரம் "பிறிக்ஸ் & ஸ்ரற்றன்" என்ஜினுடன் இணைக்கப்பட்டு இப்போது ரூ. 5200/-க்கு கிடைக்கின்றது.

- ★ நீர் இறைக்கும் அளவு மணிக்கு 27000 லீட்டர் (6000 கலன்)
- ✱ மண்ணெண்ணை கொள்வனவு மணிக்கு 0.75 லீட்டர் (0.16 கலன்)
- ✱ மொத்த நிறை 28 கிலோ (61 றாத்தல்)
- ✱ ஒரு வருட உத்தரவாதமும் நாடெங்கிலும் உதிரிப்பாகங்களும் கிடைக்கும்.

பொறியியல் விற்பனை, சேவைப் பிரிவு
ஹேலீஸ் லிமிட்டெட்
25, ஃபொஸ்டர் ஒழுங்கை கொழும்பு 10. தொலைபேசி 91181

Mel Ads

ஏக யாழ். மாவட்ட ஏக விற்பனையாளர்:
கல்யாணி ஸ்ரோர்ஸ் 31, நியூ மார்க்கட், சுன்னாகம்.

# "தலைமைத்துவ குணம்சங்கள் 'சிவாவு'க்கு நிறைய உண்டு"

## பத்திரிகையாளர் சங்கத்தலைவருக்கு பாராட்டு

(வெள்ளவத்தை)

"உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் தினகரன் பிரதம ஆசிரியர் திரு சிவகுருநாதன் ஒரு மனிதாபிமானி. எல்லோருக்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்பவர். எதிர்காலத்தில் இதை விட உயர்ந்த பதவிகளை அடைய வேண்டும்."

இவ்வாறு கலை இலக்கிய பத்திரிகை நண்பர்கள் ஏற்பாட்டில் உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத் தலைவராக இரண்டாவது தடவை தெரிவு செய்யப்பட்டிருக்கும் திரு. ஆர். சிவகுருநாதனின் பாராட்டு விழாவில் நாவலாசிரியர் திரு. செ. கணேசலிங்கன் குறிப்பிட்டார்.

பம்பலப்பிட்டி கிறீன்லண்ட்ஸ் ஹோட்டலில் நடைபெற்ற பாராட்டு விழாவிற்கு திரு. கே. சிவப்பிரகாசம் தலைமை வகித்தார்.

திரு. செ. கணேசலிங்கன் தொடர்ந்து பேசுகையில் தலைமை தாங்குவதற்கு சில குணம்சங்கள் தேவை இதை அறிவு வாயிலாக மாத்திரமின்றி, அனுபவ வாயிலாகவும் பெறவேண்டும். அத்தகைய தலைமைத்துவ குணம்சங்கள் 'சிவா'வுக்கு நிறைந்து காணப்படுகின்றன என்றார்.

திருமதி யோகா பாலச்சந்திரன் பேசுகையில், "இன்றைய இலங்கை பத்திரிகையுலகில் பொன்விழாக்கண்ட ஆசிரியர்களில் ஒருவரான திரு சிவகுருநாதன் எல்லோருடனும் அன்பாக பழகும் பண்பாளர். அவரது நேர்மையான போக்கே அவருக்கு தலைமைப்பதவிகளை தேடிக் கொடுத்துள்ளது என்றார்.

தேசிய சுவடி திணைக்கள உதவி ஆணையாளரான திரு. கே. நவசோதி பேசுகையில் 'தினகரன் ஆசிரியருக்கு இடைத்த இந்த கௌரவம் தமிழ் பேசும் மக்களுக்கு கிடைத்த கௌரவமாகும். சிங்களப்பத்திரிகையாளர்கள் அதிகமாக உள்ள உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்திற்கு தலைவராக திரு. சிவகுருநாதன் தெரிவு செய்யப்பட்டிருப்பது நமக்கெல்லாம் பெருமையாகும் என்றார்.

மற்றும் கொழும்பு மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினர் திரு. நேசபல் வேதநாயகம், திருவாளர்கள் த. கனகரத்தினம், வல்லிபுரம், சங்கீத பூஷணம் குலசீலநாதன், எஸ். அந்தனிஜீவா, ஜரூப் மசூர் மௌலானா, எஸ். திருச்செல்வம் ஆகியோர் பேசினார்கள்.

கலை, இலக்கிய பத்திரிகை நண்பர்கள் சார்பில் 'சிந்தாமணி' ஆசிரியர் திரு. இராஜ அரியரத்தினம் வெள்ளித் தட்டினை திரு சிவகுருநாதனுக்கு வழங்கினார்.

உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தலைவரான திரு. ஆர். சிவகுருநாதன் நன்றி தெரிவித்து பேசினார்.

## செல்லப்பா சுவாமி குருபூசை

(யாழ்ப்பாணம்)

கடைச்சாமியாரின் சீடர்களில் ஒருவரான செல்லப்பா சுவாமிகளின் வருடாந்த குருபூசை 17ம் திகதி நல்லூர் கந்தசுவாமிகோயில் தொடிக்கு முன்னால் இடம்பெறவிருக்கிறது.

சுவாமிகள் நல்லூரில் வாழ்ந்த கொட்டிலடியில் நினைவு மண்டபம் ஒன்று அமைக்கப் பட்டுவருகிறது.

## செனஜோன்ஸ் அம்புலன்ஸ் வருடாந்த அணிவகுப்பு

செனஜோன்ஸ்அம்புலன்ஸ்

வருடாந்த அணிவகுப்பு

[பண்டத்தரிப்பு]

யாழ். மாவட்ட சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் 53வது வருடாந்த அணிவகுப்பு இம்மாதம் 25ம்திகதி பிற்பகல் கொக்குவில் இந்துக் கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இவ்வைபவத்தில் பிரதம அதிதியாக நீதிபதி திரு கே. பாலகிருஷ்ணர் கலந்து கொள்வார் சிறப்பு விருந்தினர்களாக கொழும்பிலுள்ள சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் பிரதமஆணையாளர் திரு மஹிந்த விஜயசிங்கா, படைத் தளபதி டாக்டர் ஒஸ்வின் பெர்னாண்டோ ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

இதனை அடுத்து கல்லூரிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட முதலுதவிச் சிகிச்சைப் போட்டிகளிலும், அணிவகுப்புபோட்டிகளிலும் முதலிடம் பெற்றவர்களுக்கு கேடயங்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும். விசேடமலர்ஒன்றும்வெளியிடப் படவுள்ளது. இதற்கான ஒழுங்குகளை படையின் யாழ். மாவட்ட ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி மேற்கொண்டுள்ளார். [ஈ]

## இன்றைய பலன்

பங்குனி மாதம் 2-ம் திகதி
புதன்கிழமை
(16—3—83)

மேடம்: குடும்பத்தில் குதூகல நிகழ்ச்சிகள் இடம்பெறும். பணவரவுக்கு இடமுண்டு வெளியிடத்திலிருந்து மகிழ்ச்சிகரமான செய்தியொன்று கிடைக்கலாம். பொன்னான தினம்.

இடபம்: அன்னியர்கள் சகவாசம் சங்கடத்தில் மாட்டிக் வைக்கும் அவசர முடிவின் மூலம் சில துன்பங்கள் விளையலாம். எதிரிகளின் சூழ்ச்சிகள் மனநிம்மதியைக் குறைக்கும்.

மிதுனம்: வாழ்க்கையில் முன்னேற்றமான சம்பவங்கள் இடம்பெறும் வாகன விருத்திக்கு இடமுண்டு நீர்ப்பாசனப் பகுதியில் கடமையாற்றுபவர்களுக்கு சிறப்பான தினம்.

கடகம்: கல்வியில் ஆர்வம் பிறக்கும் குடும்பத்தில் விருந்தினர் வருகையால் கலகலப்பு ஏற்படும் நீண்டநாள் நண்பர் ஒருவரை மீண்டும் சந்திக்கும் சந்தர்ப்பம் உருவாகும்.

சிங்கம்: பணம் பல வழிகளிலும் செலவாகும் அந்நிய நபர் ஒருவரால் ஏமாற்றமடையக் கூடும் உமது நடவடிக்கைகளை எதிரிகள் வேவு பார்ப்பர் நிதானம் வேண்டும்.

கன்னி: சாஸ்திர வழியால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு பிரிந்தவர்கள் மீண்டும் வாழ்க்கையில் இணைவர் காதலர் வாழ்வில் தித்திப்பான சம்பவங்கள் நடைபெறும்.

துலாம்: தொல்லைகள் தலைதூக்கும் தொழில் புரியும் இடத்தில் ஏமாற்றத்துக்கு இடமுண்டு வழக்கு விவகாரங்களில் அரசபயத்திற்கு இடமுண்டு.

விருட்சகம்: இதயப் படுதாவில் இன்பத்தின் மின்னல். பிதாவழி ஆதரவு தாராளமாகக்கிடைக்கும். தெய்வநம்பிக்கை மேலிடும் பொதுப்பணிகளில் நாட்டம் பிறக்கும்.

தனு: இதமான வாழ்வு இன்சொல் இவற்றுடன் பெரியோர்களின் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும் செய்தொழிலாலும் சிறப்புண்டு மேலதிகாரிகளும் உதவுவர்.

மகரம்: கடற்றொழிலாளர்களுக்கு திருப்திகரமான தினம். இலட்சியப்பாதையை நோக்கி இன்று பயணம் ஆரம்பமாகும் எதிர்பார்த்த பொருள் வரவும் இன்று கிடைக்கலாம்.

கும்பம்: துன்பத்தின் ரேகைகள் படரும் உறவினர் ஒருவர் மீது ஆத்திரம் பிறக்கலாம் இதன் மூலம் கைகலப்பு ஏற்படலாம். வீண் பழிக்கு இலக்காகுவர்.

மீனம்: மனப்போராட்டம் அதிகரிக்கும் ஆதரவு கொடுத்தவர்களே முடிவில் கையை விரிப்பார்கள் கடன்தொல்லை அதிகரிக்கும் நெஞ்சம் புண்ணாகி நெடுமூச்சும் வெளிக்கிளம்பும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை.

## உரும்பராய் கிராமோதய சபைத் தலைவர்



(வண்ணார்பண்ணை)

உரும்பராய் கிராமோதய சபையின் தலைவராக திரு. ந. அரியரத்தினம் ஜே. பி. எட்டு அதிகப்படியான வாக்குகளால் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

உரும்பராய் கிராமோதய சபையின் இரண்டாவது ஆண்டு தலைவர் தெரிவு உரும்பராய் சைவத்தமிழ்வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது. உரும்பராய் பகுதி விசேடசேவை அலுவலர் திரு. எஸ். ஜெயதாஸ், கிராம சேவை அலுவலர் திரு. எஸ். செல்லத்துரை ஆகியோர் இத்தலைவர் தெரிவுக்கான தேர்தலை நடத்தினர்.

உரும்பராய் பாவனையாளர் சங்கத்தின் தலைவரான திரு. அரியரத்தினம் வலிகிழக்குப் பிரிவு பாவனையாளர் சமாசத்தின் தனாதிகாரியாகவும், யாழ் அரசினர் வைத்தியசாலையின் கமிட்டி உறுப்பினராகவும் பணியாற்றிவருகின்றார்.

உரும்பராய் ஊரெழு பட்டினசபையின் முன்னாள் உபதலைவரான இவர் இப் பகுதியில் உள்ள செல்வபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம், யோகபுரம் சனசமூகநிலையம், வைத்தீஸ்வரம் சனசமூகநிலையம் ஆகியவற்றின் போஷகருமாக இருந்துவருகின்றார்.

## விளையாட்டுப் போட்டி

[யாழ்ப்பாணம்]

வேலணை கல்வி வட்டாரத்தின் மண்டைதீவு உப வட்டாரப் பாடசாலைகளுக்கிடையிலான வருடாந்தவிளையாட்டுப் போட்டிமண்டைதீவு மகாவித்தியாலயத்தில் நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பிரதமவிருந்தினராக வேலணை வட்டாரக்கல்வியதிகாரி திரு பொன். கணேசன் கலந்து கொள்ளவுள்ளார்.

## யாருடையது?

யாழ்ப்பாணம் கண்டிறோட்டில் பிஷப் ஹவுசுக்கு அருகில் சிறப்புக்கோச்வை பொன்று கைவேலைஞ்சியுடன் கே. துரைராஜா என்பவர் கண்டெடுத்து 'ஈழநாடு' காரியாலயத்தில் கையளித்துள்ளார். உரியவர் காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## சம்பளகமிஷன் முன்சாட்சியம்

(மானிப்பாய்)

சம்பள மீளாய்வுக் கமிஷனிடம் ஆசிரியர் சம்பள விடயமாக இலங்கைத் தமிழர் ஆசிரியர்சங்க நிர்வாகிகள் இம்மாதம் 30ம் திகதி காலை கல்வி அமைச்சில் சாட்சியமளிப்பார்கள்.

கடந்த மாதம் 3ம் தேதி சம்பள மீளாய்வுக் கமிஷன் மேற்படி சங்கத்தின் கோரிக்கைகளையிட்டு நேரில் பேச அழைத்திருந்தபோது பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் சுகவீனமுற்றிருந்தால் சந்திப்பு இடம்பெறவில்லை.

இத்தூதுக் குழுவில் தலைவர் திரு டி. எஸ். கே. வணசிங்கா பொதுச் செயலாளர் திரு த. மகாசிவம் நிதிச் செயலாளர் திரு. த. அருணகிரிநாதன் கல்வி கலை கலாசாரச் செயலாளர் திரு. ஆ. க. மாணிக்கம் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். [ஈ]


மனோகரா [யாழ். நகர்] தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - ராஜஸ்ரீ
சுந்தரராஜன் - நிர்மலா
நீதிதேவன்
(புதிய பிரதி)
17-3-83 முதல்
கப்பலோட்டிய தமிழன்

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 5 காட்சிகள்
BLIND RACE
(Action- Thrill)

றீகல் [யாழ். நகர்] 16-17 Only
Daily 5 Shows
TERENCE HILL-
BUD SPENCER in
"ODDS AND EVENS,"
Color
Comedy & Fights

வெலிங்டன் (மானிப்பாய்)
தினசரி- 4-15 7-00
சனி. ஞாயிறு 1-3
சிவாஜி - உஷாநந்தினி
என்னைப்போல் ஒருவன்

வெலிங்டன்
[யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
என் அண்ணன்

லிடோ (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
ராஜன் — சௌகார்ஜானகி
துணைவன்

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-30
சிவாஜி, சரிதா, ஜெய்சங்கர் நடித்த
கீழ்வானம் சிவக்கும்
(கலர்)

குறிப்பிட்ட தினங்கள் மட்டும்
தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
ராஜா (யாழ்- நகர்)
சிவாஜி - சாவித்திரி - தேவிகா
கர்ணன் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி(சினிமாஸ்கோப்)
அடுத்த வெளியீடு
துணிவே துணை

ராணி தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
(யாழ். நகர்)
எம். ஜீ. ஆர். - ஜெயலலிதா
தேடிவந்த மாப்பிள்ளை
(புதிய பிரதி)

சாந்தி 10-30, 2-30, 4-45, 700, 9-30.
(யாழ். நகர்)
WALT DISNEY'S
SNOW WHITE
AND THE SEVEN DWARFS
FAMILY ENTERTAINMENT - TECHNICOLOUR
Parents! This is your good chance to give your, kids the finest movie treat ever!
SCHOOLS, PLEASE CONTACT FOR SPECIAL SHOWS

தென்னிந்திய ரசிகர்கள் 100 நாட்களுக்கு மேல்
கண்டு களித்த தீந்தமிழ் திரையோவியம்!
இன்று முதல்
வின்ஸர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவகுமார்-சரிதா- சில்க் சுமிதா-சுருளிராஜன்
மற்றும் பலர் நடித்த
வண்டிச்சக்கரம்
(வண்ணக் கலர்)
"சரிதா" இப்படத்தில் நடித்ததன்மூலம் சிறந்த நடிகைக்கான ஜனாதிபதி விருதுபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# துப்பாக்கி முனையில் ரூ. 2 லட்சம் நகைகள். ரொக்கம் கொள்ளை!

## 'சீருடை கோஷ்டியின்' கைவரிசை ஏழாலை வடக்கில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

சீருடையில் வந்தவர்கள் எனக் கூறப்படுபவர்கள் வீட்டுக்குள் இருந்தவர்களை துப்பாக்கி முனையில் பயமுறுத்தி சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியான நகைகளையும் ரொக்கப் பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

ஏழாலை வடக்கிலுள்ள கலட்டி என்ற இடத்தில் நேற்று அதிகாலை 1-30 மணியளவில் இப்பயங்கரக் கொள்ளைச் சம்பவம் நடைபெற்றது.

சம்பவம் நடைபெற்றபோது வீட்டில் கைம்பெண் தெய்வானை வேலுப்பிள்ளை (வயது 61), அவரது மகன் கதிர்காமநாதன், மனைவி புஷ்பமணி, அவர்களின் பிள்ளை மனோதன் (9 வயது), தெய்வானையின் சகோதரர் சிவசுப்பிரமணியம் (வயது 61), அவரின் மனைவி நாகம்மா (70 வயது) ஆகியோர் இருந்தனர். பொலிசார் விசாரணை நடத்திவருகின்றனர். (ம)

## போலி ரூபா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டார்.

நிதி அமைச்சர் திரு. ரொனி டி மெல், இந்தக் கள்ள நோட்டுகள் சம்பந்தமாகப் பாராளுமன்றத்தில் பல தகவல்களை வெளியிட்டார்.

அமைச்சர் ரொனி வெளியிட்ட தகவல்கள் வருமாறு:-

"சிங்கப்பூர் உத்தரகாளி அம்மன் கோவில் நிதி உதவிக்காக லொத்தர் சீட்டுகள் அச்சடிப்பதற்கு நிதியமைச்சிடமிருந்து அங்கீகாரம்பெறப்பட்டது.

"இந்த அங்கீகாரத்தைப் பெற்றபின்னர் பருத்தித்துறையைச் சேர்ந்த எஸ். கிருஷ்ணகுமார் என்பவர் மூன்று பிளாஸ்டிக் பைகளில் கள்ள நோட்டுகள் எனச் சந்தேகிக்கப்படும் நோட்டுக் கற்றைகளைக் கொண்டுவந்திருக்கிறார். மாளிகாவத்தை வீட்டுத் திட்டத்தில் வசிக்கும் சமாதான நீதவானான எஸ். விவேகானந்தராஜாவிடம் இரண்டு பைகள் கைமாறப்பட்டுள்ளன. கிருஷ்ணகுமார் என்பவர் விவேகானந்தராஜாவிடம் 42 ஆயிரம் ரூபா கடன்பட்டிருக்கிறாரென்பது தெரியவந்துள்ளது.

"விவேகானந்த ராஜாவிடமிருந்து 15 லட்ச ரூபா கள்ள நோட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன. விவேகானந்தராஜா கைதுசெய்யப்பட்டுள்ளார். ஆனால் பருத்தித்துறையைச் சேர்ந்த கிருஷ்ணகுமார் வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்றுவிட்டதாக நம்பப்படுகிறது.

"இதேநேரத்தில், பாங்கொக்கிலிருந்து கடத்திக் கொண்டுவரப்பட்ட 23 கட்டுக்களடங்கிய நூறு ரூபா கொண்ட பத்துலட்சத்து எழுபத்திரண்டாயிரத்து முன்னூறு ரூபாவில், இரண்டு லட்சத்து எண்ணாயிரம் ரூபா குருநாகலில் வங்கியில் வைப்பிட முயன்றபோது கைப்பற்றப்பட்டது

"யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கை வங்கிலேயே முதல் தடவையாக மாற்றுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டபோது இந்தக் கள்ள நோட்டுகள் சிக்கின. இரண்டாவது தடவை, கொழும்பு கிருலப்பனையிலுள்ள இலங்கை வங்கியில் மாற்ற முயன்றபோது சிக்கின.

"திருமதி விவேகானந்த ராஜா, கே. தவராஜா, செல்வராஜா ஆகியமூவரும் கொழும்பிலிருந்து இந்தக் கள்ளநோட்டுகளை யாழ்ப்பாணத்துக்குக் கடத்த முயன்றபோது சிக்கினார்கள். பைகளில் இந்தக் கள்ளநோட்டுகளை வைத்திருந்தார்கள்.

"இதுவரை கைதுசெய்யப்பட்டோர் விபரம் வருமாறு:-

எம். தெய்வேந்திரம் அல்லது மாஸ்டர்.

பொன்னையா இரத்தினம் (கீர்த்தி)

முன்னாள் பொலிஸ் அதிகாரி செல்லத்தம்பு துரைராஜா.

கே. தவராஜா.

விவேகானந்தராஜா.

"கள்ள ரூபா நோட்டுகளைப் பின்வருவனவற்றிலிருந்து கண்டுபிடிக்கலாம்:-

"நோட்டுக்களிலுள்ள கோடுகள் இல்லை.

"தொடர் இலக்கம் ஒழுங்கற்றதாகவுள்ளது.

"நீர் லட்சணை இல்லை.

"குற்றவாளிகளாகக் காணப்படுவோருக்கு இருபது வருடக் கடுழியச் சிறைத்தண்டனை வழங்கப்படுவதற்கு இடமுண்டு.

"கள்ளநோட்டுகள் சம்பந்தமான புலன்விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

"ஏப்ரல் மாதத்தில் புதிய நோட்டுகள் வந்து சேர்ந்ததும் பழைய நோட்டுகள் வாபஸ் பெறப்படும்.


# மரண அறிவித்தல்

## அன்னலெட்சுமி வேலுப்பிள்ளை

வடலியடைப்பைச் சேர்ந்த காலஞ்சென்ற ஞானி வேலுப்பிள்ளையின் மனைவியும், துரைராஜா (Jafferjee Brothers, Colombo), அதிபர் (Capt. M. V. Satellite- கப்டன் - சட்டலைற்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பூரணபாக்கியவதி அம்மா துரைராஜா, ஏகசிருங்கேஸ்வரி அதிபர் (மானிப்பாய் மகளிர் கல்லூரி) ஆகியோரின் மாமியாரும், ரஞ்சன் (கடெற் ஆபீசர்), றஜனி, ராஜன், றபேசன், பிரசாந்தன், திவிசாந்தன், பிருந்தரூபி ஆகியோரின் பாட்டியுமான இளைப்பாறிய ஆசிரியை திருமதி அன்னலெட்சுமி வேலுப்பிள்ளை காலமாகிவிட்டார். ஈமக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். தயவுசெய்து இவ்வறிவித்தலை உறவினரும், நண்பரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: திருமதி E. அதிபர், 'மகேஸ்வரி விலா', சண்டிலிப்பாய்.

6555

# மரண அறிவித்தல்

## சித்தானந்தன் நித்தியலட்சுமி

யாழ். வைமன் வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட முன்னாள் பெரிய கடை வர்த்தகர் இராமசாமி சன்ஸ் சித்தானந்தனின் மனைவி திருமதி நித்தியலட்சுமி காலமானார். இவர் வேலணை சின்னத்தம்பி கந்தையாவின் மகளும், தவராஜா, தனஞ்செயன் (துறைமுகக் கூட்டுத்தாபனம்), அன்னலட்சுமி, தனலட்சுமி ஆகியோரின் சகோதரியும், வேலணை நடராசா வித்தியாசாலை ஆசிரியர் சிவஞானசம்பந்தர், சிவசுப்பிரமணியம், தவராஜா ஆகியோரின் மைத்துனியும், திருமதி நீலாம்பிகை இராமசாமியின் மருமகளும் ஆவார். பூதவுடல் சரவணை சிவஞானசம்பந்தரின் இல்லத்திலிருந்து புதன்கிழமை (இன்று) காலை 10 மணிக்கு சரவணை மயானத்திற்கு ஈமக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

6554

முதன்முறையாக- யாழ். நகரில்

# DIPLOMA IN HOTEL MANAGEMENT & TOURISM

3 மாதத் தீவிரப் பயிற்சி

வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் உடனடி வேலை வாய்ப்புக்கள்.

பாடநெறி:
- —ஹோட்டல் முகாமைத்துவம்.
- —உல்லாசப் பிரயாணத் தொழில் முறை.
- — SPOKEN GERMAN, FRENCH & ENGLISH.

முதன்மை வாய்ந்த ஹோட்டல்களில் செய்முறைப் பயிற்சி (Practical) அளிக்கப்படும்.

கட்டணம்: முழுப்பயிற்சி நெறிக்கும் ரூபா 950-00

WEEKEND CLASSES (சனி, ஞாயிறு மட்டும்)

ஆரம்பம்: 19-03-1983

ASTAN INSTITUTE

166/1, HOSPITAL ROAD, JAFFNA.


# சுழல் காற்றினால் சேதமடைந்த கட்டடங்களை உடனடியாக திருத்த நடவடிக்கை!

(யாழ்ப்பாணம்)

சுழல் காற்றினால் சேதமடைந்த நாவாந்துறை சென். நீக்கலஸ் சனசமூகநிலையம், மகளிர் மன்றம் ஆகியவற்றின் கட்டிடங்களின் திருத்தவேலைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு யாழ். கட்டிடத் திணைக்களப் பகுதியினரை உள்ளூராட்சி, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் செயலாளர் திரு. ஆர். பாஸ்கரலிங்கம் பணித்துள்ளார்

யாழ். தேசிய வீடமைப்பு அதிகார சபை அலுவலகத்தில் நடைபெற்ற மகாநாடொன்றில் கலந்து கொண்ட திரு. ஆர். பாஸ்கரலிங்கம் சுழல் காற்றினால் ஏற்பட்ட சேதம் பற்றி அறிந்துகொண்டதைத் தொடர்ந்து யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரனுடனும் மற்றும் உயரதிகாரிகளுடனும் நாவாந்துறை சென்று பார்வையிட்டு, பாதிப்புக்குள்ளான கட்டிடங்களைத் திருத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு யாழ். கட்டிடத் திணைக்களப் பொறியியலாளர் திரு. நந்தீஸ்வரனைக் கேட்டுக்கொண்டார்.

சென். நீக்கலஸ் சனசமூக நிலையத் தலைவர் திரு. ஜேக்கப் பெஞ்சமின், திரு. வேலுப்பிள்ளை அப்பையா ஜே. பி. ஆகியோர் நேற்றுமுன்தினம் யாழ். எம். பி யுடன் தொடர்பு கொண்டு எம். பி சகிதம் யாழ். கட்டிடத் திணைக்களப் பொறியியலாளர் திரு. நந்தீஸ்வரனைச் சந்தித்து அவசர நிலைமையை விளக்கியதைத் தொடர்ந்து திருத்த வேலைகளை இவ்வாரத்தில் ஆரம்பிப்பதென்று முடிவுசெய்யப்பட்டது.

## இளைஞர்களின் ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பனாகொடை முகாமில்

"பனாகொடை தடுப்பு முகாமில் காவலில் வைக்கப்பட்டுள்ள எமது இளைஞர்கள் மிகக் கீழ்த்தரமாக நடத்தப்படுகிறார்கள். மல, சல கூடங்களைக்கூடக் கழுவும்படி பணிக்கப்படுகிறார்கள். ஒருவர் குற்றவாளியென நிரூபிக்கப்படாதவரை சுற்றவாளியே. 28-8-1981 சரசாலையைச் சேர்ந்த ஜெயமுகுந்தன் என்ற இளைஞர் கைதானார். இவரது தாய் இருதயநோயாளி-இவர் மகளைப் பார்க்க விரும்புகிறார் என்று அனுமதி தரவேண்டும் என்றும் கோரி தகப்பனார் பாதுகாப்பு அமைச்சருக்குக் கடிதம் எழுதினார் ஆனால் அனுமதி மறுக்கப்பட்டு விட்டது.

## தனியார்துறை..

[1ம் பக்கத் தொடர்ச்சி[

பாராளுமன்றத்தில் பேரச்சுவார்த்து அமைச்சர் ஜனாப் எம். எச். முகமத் மேற்கண்ட தகவலை நேற்றுத் தெரிவித்தார்.

இந்த 100 ரூபா அதிகரிப்புடன் அடுத்த 6 மாத காலத்தின்பின் வேதன உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார். [ஈ]

## மாணவர் மீது...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போய்க்கொண்டிருந்த பொழுது பிரதான வீதிக்கருகில் நீதிபதியின் வீட்டுக்குமுன்னால் பருத்தித்துறையை நோக்கி 2 வாகனங்களில் வந்து கொண்டிருந்த இராணுவத்தினர் ஹாட்லிக் கல்லூரி வீரர்களைச் சைக்கிள் செயின்களாலும், சம்பாத்துக் கால்களாலும் தாக்கிக் காயப்படுத்தியதுடன் அவர்களின் சைக்கிள்களையும் தூக்கிக் கடலுக்குள் வீசிவிட்டார்களாம்.

இச்சம்பவத்தைக் கண்டிக்கவும் இனிமேல் நடவாமல் தடுக்கவும் கோரி ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள் இன்று பகிஷ்கரிப்பில் ஈடுபடுகின்றனர்.

# பகிஷ்கரிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழக மாணவர் அவை முன்வைக்கப்பட்ட மற்றும் இரு கோரிக்கைகளும் நிறைவேறும் வரை பகிஷ்கரிப்பதென முடிவு செய்துள்ளது. (மா)

## இன்று

[யாழ்ப்பாணம்]

நல்லை ஆதீனத்தில் திருப்பனந்தாழ் ஆதீன ஓதுவார் மூர்த்திகள் முத்துக்கந்தசாமி தேசிகரின் பண்ணிசைக் கச்சேரியும், திருக்கோணமலை இராமநாத சிவாசாரியாரின் சிறப்புச் சொற்பொழிவும் இன்று மாலை 5-00 மணிக்கு நடைபெறும்.


# மரண அறிவித்தல்

## திரு. கதிரவேலு வீரகத்திப்பிள்ளை

காரைநகர் தோப்புக்காடு பிரபல சமூக சேவையாளரும், முன்னாள் காரைநகர் தெற்கு கிராமசபை உப தலைவரும், சீ-நோர் அபிவிருத்தித் திட்ட சமூக சேவைப் பணிப்பாளரும், வடமாகாண ஐக்கிய மேற்பார்வை சங்க நிர்வாக உறுப்பினரும், அகில இலங்கை மீன்பிடிச் சங்க இயக்குநர் சபை அங்கத்தவரும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நிருபரும், முன்னைநாள் ஈழநாடு, தினபதி, சிந்தாமணி நிருபரும், தற்போதைய வீரகேசரி நிருபருமாகிய திரு. க. வீரகத்திப்பிள்ளை அவர்கள் காலமாகிவிட்டார். அன்னார் ஜெகதாம்பாளின் அன்புக் கணவரும், அன்பரசியின் (இராமநாதன் கலைக் கல்லூரி) தந்தையும், திருமதி வீரசிங்கம் - தங்கமுத்து அவர்களின் மருமகனும், சித்தங்கேணி மகா வித்தியாலய அதிபர் வே. தம்பையா அவர்களின் மைத்துனரும், முன்னாள் இளைப்பாறிய தலைமை ஆசிரியர் நாகலிங்கம் அவர்களின் சகோதரரும், சங்கானை விசேட சேவை அலுவலர் திரு. கதிர்காமநாதனின் மாமனும் ஆவர். அன்னாரின் ஈமைக்கிரியைகள் 17-03-83 வியாழக்கிழமை மாலை 3-00 மணியளவில் தோப்புக்காட்டிலிருந்து நீலகிரி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். தயவுசெய்து உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

சுப்பர் தம்பிஐயா - மைத்துனர்.
தம்பிஐயா தெய்வானைப்பிள்ளை - சகோதரி
முத்துச்சாமி நவரத்தினம் - மைத்துனர்
நவரத்தினம் கமலாம்பிகை - சகோதரி
கந்தையா துரைராசா - மைத்துனர்
துரைராசா திலகவதி - சகோதரி

6556


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983—ம் ஆண்டு மார்ச் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number Q. B. 100236/81. Eelanaadu - P. O. Box: 49, Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.